311

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஹூ ஐப்பசிமீ [ஸஞ்சிகை 9.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**வேதாந்ததேசிகன் வைபவம்.**

புரட்டாசி மாஸம் குறிப்புகள் வரையும் காலத்தில், யாம் மறந்துபோன நம் கடமையை நமக்கு நினைப்பூட்டும் விஷயங்கள் வெளிப்பட்டன வாகையால், அம்மாஸத்தை நமக்குப் பாவநமாக்கிய மஹாசார்யன் ஸம்பந்தமாக இவ்விடம் சிலவற்றை எழுதத் துணிகின்றோம். அமரர் சத்ருக்களை விரட்டியோடச் செய்கின்றதும், பத்மாஸஹாயனுடைய திருவாராதந காலத்தில் உபயோகப்படுவதுமான ஸ்ரீவேங்கடநாதன் கண்டையே நம் தேசிகனுய்த் திருவவதாரம் செய்ததென ஜ்ஞாதாக்களால் அநேக உபபத்திகளைக் கொண்டு உத்ப்ரேக்ஷிக்கப்படுகிறதென்று ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயத்தில் தேசிகன் காலத்தில் தேசிகனுலேயே உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்த உத்ப்ரேக்ஷைக்கு முதற்காரணம், ஸ்வாமியினுடைய மாதாபிதாக்கள் கண்ட ஸ்வப்நம். ஸஹகாரி காரணங்களி லொன்று ஸ்ரீநிவாஸன் தீர்த்ததிநத்

தில் ஸ்வாமியினுடைய அவதாரம். நைநாராசார்யரும் இந்த உத்ப்ரேக்ஷையை அநுவதிக்கின்றார். ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞையால் வேங்கடநாதார்யன் வேதாந்ததேசிக பதத்தில் நிவேசிக்கப்பட்டன ரென்று தேசிகனுடைய பல க்ரந்தங்களில் சொல்லியிருக்கின்றது. லோகம் அறியவும், ஸர்வ விதுஷர்களும் புகழவும், கவிதார்க்கிகஸிம்ஹமனென்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும், கொண்டாடப்பட்டார் தேசிக னென்பது யாவரும் அக்காலம் முதல் இதுவரையிலும் ஸம்மதித்த விஷயம். ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரத்வம் ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கநாயகி அளித்த விருது. இக்காலத்தில் போல, அக்காலமும், வேதம் கேதமடையவும், முநிஜநங்களுடைய வசநங்கள் நித்யம் அவமாநிக்கப்படவும், வர்ணஸாங்கர்யம் எதிர்பார்க்கப்படவும், புராணங்கள் ப்ரமாணகோஷ்டியினின்று விலக்கப்படவும், மாயாவாதம் தழைக்கவும், ஶூந்யவாதம் அங்கீகரிக்கப்படவும், ஸநாதநதர்மத்தின் ரக்ஷகனுக விஷ்ணு கண்டாம் சமாய்த் தேசிகன் அவதரித்தாரென்று மஹான்களால் வெளியிடப்பட்டது. பாரதவர்ஷத்தை வடக்கே வளைந்த சாமீகர பர்வதம் முதற்கொண்டு, அதனுடைய தக்ஷிணவதியாய் நின்ற லங்காபுரம் வரையிலும், ஆசார்ய ரெனப் பெயர்கொண்ட அனைவரையும் ஸம்புத்தி செய்து மஹாகவி வெங்கடாசார்யர் கேட்டனர். எப்படியென்றால், “உங்களை நான் பணிந்து யாசித்து இவ்வார்த்தைகள் மொழிவேன். அப்படிப்பட்ட கவித்வமென்ன, தர்க்க பாண்டித்யமென்ன, மீமாம்ஸா ஶாஸ்த்ரத்திலும் வேதாந்தத்திலும் ஶ்ரமப்பட்ட புத்தியென்ன, இவற்றுள் நிகமாந்ததேசிகனுக்கு ஸமமானவரை நீங்கள் கண்டதுண்டோ? ஸத்யமாகச் சொல்கின்றேன். சொல்லுங்கள்.” என்றிவ்விதமாக ப்ரதிஜ்ஞை செய்தார். இதனல், புதஜநங்கள் தேசிகன் மஹிமையை எவ்வண்ணம் கொண்டாடின ரென்பது தெரியவில்லையா? தொட்டயாசார்யர் ப்ரப்ருதிகள் அத்வைதிகளுடன் வேதாந்தவிஷயமான வாதம் செய்து அந்த அவஸரத்தில் தேசிகனுடைய திவ்யஸூக்திகளால் அநுகூலத்தை யடைந்து தேசிக பக்தியால், “ஸம்ப்ரதாய பரிசய மற்றவரும், யதிராஜனுடைய ஸூக்திகளின் தாத்பர்ய மறியாதவரும், குத்ருஷ்டிகளின் கர்வத்தைச் சமிப்பிக்காதவரும், அந்யருமான அநாகமாந்தார்யர்களால் போதும்போதும்” என்று அவர்கள் சொல்லும்படி யிருந்ததன்றோ? இதனுடைய தாத்பர்

யம், ஸ்வாமியினிடம் இந்தக் குணவிசேஷங்கள் நன்கமைந்தன
வென்பதே. ஸ்வாமியினுடைய பகு க்ரந்தங்களுக்கு வ்யாக்யாதா
வான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரால் "இப்படிக் கவிதார்க்கிக ஸிம்ஹ
னுடைய காவ்யங்களில் லளிதமாயிருக்கு மவற்றில்கூட, இவ்
வண்ணம் நன்கு சிந்திக்கப்பட்டால் ஒவ்வொரு பதத்திலும் விசே
ஷார்த்தங்கள் ப்ரகாசிக்கின்றன," என்றல்லோ நம் தேசிகனுடைய
கவிதாசக்தி ஸ்துதிக்கப்பட்டது. "நாலு வேதங்களிலும் பரிச்
ரமம் ஒருவர்க்கு உண்டாகலாம். அப்போது சாஸ்த்ரங்களில் விவே
கம் ஜநிக்காது. சாஸ்த்ரங்களில் விவேகமும் உண்டாயிருக்கட்
டும். அப்போது ஸாஹித்ய ஜ்ஞாநமும் கவித்வமும் சேரமாட்டா.
அவையும் சேர்ந்ததாக வைத்துக்கொள்வோம். அப்போது, விந
யம், ஆசாரம், பக்தி, க்ஷமை முதலான கல்யாண குணங்கள்
விளங்கமாட்டா. நாலு வேதங்களையும் அப்யஸித்த ச்ரமமும்,
சாஸ்த்ரங்களில் விவேகமும், ஸாஹித்ய ஜ்ஞாநம், கவித்வம்,
விநயம் முதலான கல்யாணகுணங்கள், இவை யாவும் வேதா
ந்ததேசிகனை ஆச்ரயித்து விளையாடுகின்றன" என்று மஹான்
களால் நம் நிகமாந்த மஹாதேசிகன் கொண்டாடப்பட்டனர்.
யாதொரு தேசிகனுடைய சரித்ரமானது ஸத்துக்களுடைய ஸதாச
ரிதத்தை வ்யவஸ்தை செய்கின்றதோ, யாதொரு தேசிகனுடைய
வசநங்கள் ஸகல ஸம்சயங்களையும் நிவர்த்திக்க முக்யாதாரம்
ஆகின்றனவோ, ஸகல தர்ம சூந்யரான மநுஷ்யர்க்கும் யாதொரு
தேசிகனுடைய கருணையானது கதியாய் நிற்கின்றதோ, அந்த
ஸகலதந்த்ர நிர்வாஹகர் நமக்கு சரண மாகட்டு மென்றும், ஶாந்தி,
சாந்தி, சௌசித்வம், விஷயஜயம், தீரத்வம், நிஸ்ப்ருஹத்வம்,
சேஷத்வம், லக்ஷ்மீநாதன் அவனடியார் இவர் விஷயமாகப் பார
தந்த்ரியம், கலக்கமின்மை, படுத்வம், ம்ருதுத்வம், ஸமத்வம்,
வஶித்வம், நிர்ப்பரத்வம், அஸூயையில்லாமை, இவை யாவும் தேசி
கனுக்கு ஜந்மம் முதல் ஸித்தித்து நின்றனவென்றும் அண்ணன்
ஸாதித்தருளினர். இன்னும் ஸ்வாமியினிடம் பக்தியற்றவர் இராமா
நுஜனுக்கு அப்ரியர் ஆவார் என்றும், அப்படிப்பட்டவர் விஷ்ணு
காருண்யத்தை அடையமாட்டா ரென்றும் சொன்னர். ஸாங்க்
யம், யோகம், மீமாம்ஸை, குருமதம், சைவம், ஜைநம், சங்கரா
சார்யமதம், பாஸ்கரமதம், பௌத்தமதம் யாதவப்ரகாசமதம்,
இவற்றைப்பற்றிய சாஸ்த்ரங்களின் பரிசயத்தால் கர்வம்கொண்ட

வாதிகள் அனைவரையும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் நிரஸநம் செய்தவர் என்றும் சொல்லியிருக்கின்றார்.

இந்த ரூபமாக ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தை ரக்ஷித்து ஸ்தாபித்த தேசிகனுக்கு ஶத்ருக்கள் நேரிடாமல் இருப்பரோ? அண்ணன் காலத்தில் சிலர் தேசிகனைத் தூஷிக்கவே, ஸ்ரீராமனையும் ஸ்ரீக்ருஷ்ணனையும் தூஷிக்க ராவணன் ஶிஶுபாலன் முதலானோர் உண்டானவண்ணம், தேசிகனையும் தூஷிப்பவர் உண்டானார் என்பதில் ஆச்சர்யமென்னென்று அண்ணன் உரைத்தனர்.

தேசிகன் க்யாதிலாப பூஜை முதலியவற்றை ஈஷத்தும் வேண்டினவரன்று; ஸ்ரீவைஷ்ணவர் விஷயமாக மிகவும் பாரதந்த்ரியத்தை மேற்கொண்டவர். நம்முடைய ஸம்ப்ரதாயஸ்தர் எல்லோர்க்கும் அவரே குரு, அவரே தெய்வம், அவர்தான் நமக்கு ப்ராப்யரும் ப்ராபகருமாக நிற்பவர். வைதிகதர்மமெனும் வர்ணாச்ரம தர்ம ரக்ஷகராக ஸ்வாமி விளங்கினாராதலால், அந்த தர்மத்யாகத்திலும், வர்ணஸாங்கர்யத்திலும் ருசியுடையோர் நம் தேசிகனை வழிபடாமல் விலகிவிட்டனர்.

**தேசிகன்விஷயமான துரபிப்ராயங்கள்.**

இது இப்படி நிற்க, சென்ற செப்டம்பர் மாஸம் 24-ம் தேதியன்று, காஞ்சீபுரம் வடகலையாரில் சிலர் ஹைகோர்ட்டுக்குச் செய்துகொண்ட மனு ஒன்றைத் தள்ளுங்காலத்தில், அப்படிச் செய்த ஜட்ஜிகள் அந்த வ்யவஹாரம் (Vexations) துன்பம் உண்டாக்குவதென்றும், (of a Sectarian character) கக்ஷிவிஷயமானதென்றும், (Promoted by bigotry) தகுந்த காரணமற்ற விச்வாஸத்தால் வ்ருத்தி செய்யப்பட்டதென்றும் சொன்னார்கள். இது வ்யவஹார ரிகார்டுகளை நன்கு மதித்துச் சொன்ன முடிவாக எண்ணத்தக்கதன்று. இப்படி யோசித்த ஜட்ஜிகளில் ஒருவரான கனம்பொருந்திய டி. சதாசிவய்யர், இந்த மாதம் 4-ம் தேதி விக்டோரியா பப்ளிக் ஹாலில், தேசிகன் கால சரித்ரத்தைப்பற்றி ஒருவர் உபந்யாஸம் செயயவே, அப்போது அக்ராஸநத்தை வஹித்துத் தேசிகன் பால்யகாலத்தில் (Sectarianism) கக்ஷிவிஷயமான அபிமாநமும், (Bigotry)

அகாரண விச்வாஸமும் கொண்டவரென்றும், 'வயஸ வந்தபின்பு இந்தக் குறைகளை ஜயித்தன ரென்றும் வெளியிட்டனர்.

இவ்விதமாகக் கக்ஷியில் அபிமாநமும், அகாரணவிச்வாஸமும் தேசிகனுக்கும் ததீயாளுக்கும் குற்றமாக ஆரோபிக்கப்பட்டன. இப்படி ஆரோபித்தவர் அப்படிச் செய்வதற்கு நிர்த்தேசிக்கக் கூடியதோர் காரணத்தைக் காட்டியுமிலர். தார்க்கிகர்க்குள் ஸிஹ்மமெனப் பெயர் பெற்றவர், தக்க காரணமின்றி ஏதேனுமொரு விச்வாஸம் கொண்டாரென்பது ஸூதராம் சிந்திக்கக் கூடியதன்று. அவருடைய ஸம்ப்ரதாயமான ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைக் கக்ஷியெனச் சொன்னால் சங்கரமதம், பௌத்தமதம், ஜைநமதம், சைவம், மத்வமதம், ராமக்ருஷ்ணமதம், தியாஸபி, ஆர்யஸமாஜம், ப்ரஹ்ஸமாஜம், கிறிஸ்தவ மதத்தின் உட்பிரிவுகள், மஹம்மதியமதம், அந்யமதங்கள், இவை யாவற்றுள்ளும் அவ்வண்ணமே கக்ஷியெனக் கூடாததோர் மதமுண்டோ? உண்டென்றால் அச்சொல்தான் மிகுதியாய் நிற்கும். 'ஸமய கோடிகள்' என்று இவற்றை ஒரு பெரியவர் சொன்னார். ஒவ்வொன்றை அபிமாநித்துப் பரர் தூஷணையை நிரஸித்து அதை ஸ்தாபித்தவர் எல்லோரும் கக்ஷிகளை அபிமாநித்தவரே. தத்காலம் காரணம் காட்டாமலே தூஷிக்கின்றவர் பெருகுகின்றார்கள். அத்வைதத்திற்கு விசிஷ்டாத்வைதமும், விசிஷ்டாத்வைதத்துக்கு அத்வைதமும் நியமேந பூர்வபக்ஷங்களாய் நின்றன. உபய ஸித்தாந்த க்ரந்தங்களிலும், வாதப்ரகரணங்கள் கக்ஷிகளை ஆதரித்தே வளர்கின்றன. ப்ரதிவாதிகள் ஸமாந சப்தங்களாலே அந்த க்ரந்தங்களில் தூஷிக்கப்படுகின்றனர். யாம் கேள்விப்பட்ட வரையில் ராமாநுஜ பாஷ்யத்தில் பூர்வபக்ஷிகளாய் எண்ணக்கூடிய அத்வைதிகள் க்ரந்தங்கள் இப்போதில்லை. அவர் அங்கே தூஷிக்கத்தான் படுகின்றனர். ஸ்ரீபாஷ்யத்தைத் தூஷித்துக் கண்டந கண்டநகாத்யமெனும் அத்வைத வாத க்ரந்தம் பிறந்ததெனக் கேள்வியுற்றோம். அதை நிரஸிக்கத் தேசிகன் சததூஷணியை ஸாதித்தருளினார் என்றும் செவியுற்றோம். அதைத் தூஷித்து க்ரந்தங்கள் அத்வைதிகள் செய்தனர். இப்படி ப்ரஹ்மாநந்தீயம், ந்யாயபாஸ்கரம் வரையில் வாதக்ரந்தங்கள் பெருகியுள. ஸ்ரீ சங்கராசார்யரும் ஸ்வக்ரந்தங்களில் பூர்வபக்ஷிகளைத் தூஷிக்கின்றார். த்வைதவாதிகளை ஸம்யக் தூஷிக்கின்றனர். இந்த க்ரந்தங்கள் யாவும் தர்க்கநடையில் வ்ருத்தியாய் நின்றன. யாமெதா

தர்க்கவாஸனையுமின்றித் தத்கால மதாபிமானிகள் பரஸ்பர தூஷணை செய்கின்றனர். ஆகையால் இந்த விஷயத்தில் தேசிகனைப் பொறுக்கி யெடுத்துத் தூஷித்தல் ந்யாயவிரோதம். அவருடைய க்ரந்தாவலோகநம் செய்யாதவர் என்று ஊகிக்கத்தக்கவர்கள் இப்படிக்கெல்லாம் ஆரம்பித்துட்டால் யார் என்ன செய்யலாம்? அத்வைத விஷயத்தில், க்ரந்தங்கள் எழுத ஆரம்பித்தமுதல், யாவதாயுஷம், தேசிகன் ஏகாபிப்ராயத்தைக் கொண்டவரே. யதிராஜஸப்ததி அவர் பால்யத்தில் எழுதவில்லை. சததூஷணி பால்யத்தில் எழுதிய க்ரந்தமன்று. அவர் முடிவாய் எழுதிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் மாயாவாதிகளைத் தாம் கண்டித்த விஷயத்தைப் பற்றி, 'க்ஷதாம் மதிவேஷாவீ நிவஷாவிதஃ', என்று ஸாதித்தருளினர். தேசிகன் ஸாதித்த வாதக்ரந்தங்கள் எல்லாம் அத்வைத மதத்தை நிரஸிக்கப் பிறந்தன. தேசிகன் காலத்தில் தென்கலையார் வடகலையார் எனும் விபாகமேயில்லை. ராமாநுஜன் காலத்துக்குப் பிறகு எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், எனப் பரம்பரையாய் ஏற்பட்ட ஆசார்யர்கள் ஸ்ரீரங்கத்தில் வஸித்தனர். இவர்க்குள் பின்பட்ட நால்வர் அதிகமாக ஆழ்வார் பாசுரார்த்தங்களைச் சிந்தித்தவர்கள். அப்படியே காஞ்சீபுரத்தில், திருக்குருகைப்பிரான்பிள்ளான், கிடாம்பி ஆச்சான், ராமாநுஜப்பிள்ளான், ஸ்ரீரங்கராஜர், நடாதூர் அம்மாள், ராமாநுஜாசார்யர், தேசிகன், இவர்களால் அலங்க்ருதமான ஆசார்ய பரம்பரைகள் விளங்கின. இவர்கள் ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயமெனும் ஆழ்வார் பாசுரார்த்தங்கள், இரண்டையும் காலக்ஷேபம் ஸாதித்தார்கள்.

பிள்ளை லோகாசார்யர், பெரியவாச்சான்பிள்ளை முதலானவர்கள் ஸ்ரீரங்கத்தில் வியாபகராக இருக்கையில், அங்கே அத்வைதிகளால் ராமாநுஜ தர்சநத்துக்கு இடையூறு நேரிடவும், அவரால் அழைக்கப்பட்டுத் தேசிகன் ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். பரவாதிகளை நிரஸித்தார். ஸ்ரீரங்கநாதன் ஆஜ்ஞையால் வேதாந்தாசார்யரென்றும், ஸ்ரீரங்கநாயகி அநுக்ரஹத்தால் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்றும் பெயர்களும் அளிக்கப்பட்டார். அவ்விடம் அவர் வஸித்த காலத்தில், ஸம்ப்ரதாய நிரூபண விஷயத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்த ஆசாயர்களுக்கும், காஞ்சீபுரத்தில் இருந்த ஆசார்யர்

களுக்கும் அபிப்ராய பேதங்கள் வெளிப்படவே, ஸ்வாசார்யர்களுடைய மதத்தை ஸ்தாபிக்கும் பொருட்டும், தென்னுசார்யர்களுடைய அபிப்ராயங்கள் சில ஔசித்யங்களைக் கொண்டு ஏற்பட்ட அதிவாதங்களௌனக் காட்டவும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமெனும் க்ரந்தம் ஸாதித்தருளினர். தேசிகன் எழுந்தருளியிருந்த காலம் வரையில் அதற்கு விரோதமாக யாதொன்றும் எழுதப்படவில்லை. “ [illegible] ” - என்கிறபடியே, தர்க்கபாண்டித்யத்தாலே நினைத்த தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே, நாம் ப்ரமாணபரதந்த்ரராய்ப் போருகிறது ”-என்று ஸ்வாமி ஸாதித்தபடியே, ப்ரமாணபரதந்த்ரராய் அந்த க்ரந்தமும் மற்றெல்லா க்ரந்தங்களும் தேசிகன் வெளிப்படுத்தினர். தேசிகன் திருவுள்ளம் நமக்கு ப்ரமாணமாகும்படியே, அங்ய ஆசார்யர்கள் காட்டிய மார்க்கங்களை அவர்களுடைய சிஷ்யர்கள் அபிமாநிக்க யாம் குறை சொல்கின்றேமில்லை. இவர்க்குள் தேசிகதூஷகராய் வெளிவருமவர்கள், தக்க காரணங்களை வெளிப்படுத்தித் தூஷித்தாராகில், அத்தூஷணங்களை யாம் போதிக்கப் பொருந்தும். காரணங்களைக் காட்டாமலும், தேசிகன் க்ரந்தங்களை ஸக்ருதாவது அவலோகநம் செய்தனரென்று எண்ணவும் இடமின்றி நிற்கக் கிஞ்சித்தும் வாஸ்தவத்துடன் பொருந்தாதபடித் தூஷித்தல் யுக்தமன்று. இவ்வண்ணமே ஸர் பங்கரநாயர் என்பவர் ஸோஷல்ரிபாரம் ஸபாத்யக்ஷராயிருந்து, ராமாநுஜனை ஸரியாக வழிபடுபவர் தென்கலையா ரென்றுரைத்ததைப்பற்றி முன்பே யோசித்திருக்கின்றோம்.

ஸர் ஶங்கரநாயர் இன்னுமோர் உந்நதமான லௌகிக ஸ்தாநத்தை இப்போது அடைந்தனர். அதைப்பற்றி அவருடைய மித்ரர்கள் அவர்க்கு அக்டோபர் மாஸம் 9 - ம் தேதி விருந்தளித்தார்கள். அங்கே அவர் பேசுங்கால், இவ்வாறு மொழிந்தனர் :— “ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் விஷயமாக எவரும் மனமறிந்த பக்ஷபாதத்தைச் சாட்டமாட்டாரென்று நான் நம்புகின்றேன். ஒருவேளை புத்தி பூர்வமற்ற பக்ஷபாதம் இருக்கக்கூடும்; ஏனெனில் அவர்கள் தமது ஸம்ஸர்க்கங்களென்ன, பூர்வ பயிற்சியென்ன, இவற்றின் விளைவுகளை த்யஜிக்கச் சக்தரன்று; ஆனல் அவர் எல்லேரும் அதை அதிக்ரமிக்க முயன்றவரே.” இது ஸத்யம். கலாப்ர

யுக்தமான வ்யவஹாரங்கள் ஸதா உத்பந்நங்களாகின்றமையால், கலாவிஷயமாக, ஹைகோர்ட்டு ஜட்ஜிகளைப்போல் படித்தவரும், புத்திமான்களுமாயிருக்கின்ற கலாபிமாநிகளை, ஸத்ஹேது வின்றி விஸ்வாஸம் (Bigotry) கொண்டவரென்றும், கக்ஷிவிஷயமான துரபிமாநம் (Sectarianism) கொண்டவரென்றும், ஒரு கலை யார்தான் ராமாநுஜன் தர்சநத்தை உண்மையாய் வழிபடுவ ரென்றும், இருகலையிலும் சேராத ஹைகோர்டு ஜட்ஜிகள், கலாவிஷய மான விசாரத்துக்கு ஸாமர்த்யமும் அவஸரமு மின்றிக்கே எண்ணுவதும், எண்ணியபடி வெளிப்படுத்துவதும், யுக்தமாய் ஏற்படமாட்டாது.

கனம் பொருந்திய ஸதாசிவய்யர் கொண்ட அபிப்ராயத்தால் தேசிகனை ஒரு வடகலையானும் துறக்கப் போகின்றானில்லை. ஆனால் பெரிதானதோர் ஸமஸ்தாநத்தை வஹிக்கின்றவர்கள், தம்மிடம் வ்யவஹார ஶமநத்தின் பொருட்டு வருகின்றவர்கள் கஷ்டப்படும் படியாக, வ்யவஹாரஸம்பந்தமற்ற உக்திகளைத் தமது உபந்யாஸங்களினின்று நிவர்த்தித்தாராகில் அது நன்றாயிருக்கு மென்று நம்புகின்றோம்.

**பாதிரிமார் ஆலோசனை ஸங்கங்கள்.**

சென்ற சில நாட்களாக நித்யமாக வெளிவரும் இங்கிலீஷ் பத்திரிகைகளை வாசித்தால், பாதிரிமார்கள் பல விடங்களில் கூடினார்களென்று தெரிகின்றது. தமது மதத்தை க்ராமங்கள் தோறும் பஹிரங்கமாக ப்ரவசிங்கிக்கின்றார்கள். கவர்ன்மெண்டார் உதவியைக் கொண்டும், பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கியும், கிறிஸ்தவரிடம் பணம் சேகரித்தும், இயன்றமட்டும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தும், பிள்ளைகட்குப் பலவந்தமாகத் தம் மதத்தைக் கற்பிக்கின்றனர். வைத்யசாலைகள் ஏற்படுத்தி, ஏழ்மைத்தனத்தால் அவ்விடம் வரும் ஹிந்துக்களுக்குப் போதகரைக் கொண்டு தம் மதத்தைப் போதிப்பிக்கின்றனர். இவர்கள் செய்யும் வ்யாபாரங்களால் நம் தேசத்தவர்க்கு ஐஹிக பலன்கள் உண்டாகின்றன. அதனால் அவர்க்கு ஜந்மஸித்தமான ஸ்வமதத்தில் விஸ்வாஸம் குறையவும் வழியுண்டாகின்றது. ஸ்வமதாபிமாநம் விலகிய மநஸ்கரான ஹிந்துக்கள், பாதிரிமார் ப்ரயத்நங்களைப் பற்றிச் சோகிக்கின்றாரில்லை. இவர்க்குள் பலர் வைதிக

தர்மதூஷகர் ஆனபடியால், தாம் இப்போது கிறிஸ்தவராக ஸித்தமாயிராராயினும், பாதிரிமார் ப்ரயத்நங்கள் தமது உத்தேசங்களை ஸாதித்துக் கொடுக்குமென்றெண்ணி, அவர்க்கு உபபலமாகவும் இருக்கின்றனர்.

ஒரு பாதிரி, தமது கூட்டத்தாரால் கிறிஸ்தவ மதம் பல நூறு க்ராமங்களில் ப்ரஸங்கிக்கப் பட்டதென்றும், அவ்விடங்களில் அநேகமாயிரம் ஜநங்கள் அதைக் கேட்டாரென்றும், நூறு நூறாக ஹிந்துக்கள் கிறிஸ்தவராக ஸித்தமாயிருக்கின்றனரென்றும் சொன்னார். இப்படி இந்தியா வெங்கும் ஹிந்துக்கள் ஸ்திதி நிற்க, இதைப்பற்றி ஒரு பேபரிலும் ஒருவனாலும் துக்கோதர்க்கமான எழுத்துக்களைக் காண்கின்றோமில்லை.

ஸ்வமதாபிமானிகளான ஹிந்துக்கள், ஸ்வமதத்தைத் தெரிந்துகொண்டே தமது சிறுவர்கள் தத்காலம் அநிவார்யமான இங்லீஷ் வித்யைகளைக் கற்கும்படி, ஓர் கலாஸங்கம் ஏற்படுத்த வெண்ணி, அதனிமித்தமாக ஸ்வமதஸ்தர்களிடம் பணமும் சேகரித்தார்கள். அவர் ப்ரயத்நத்தை ராஜாங்கத்தார் ஈஷத் ஆதரித்துக் கலாஸங்கம் ஏற்படுத்தவும் உதவி செய்தார்கள்.

இதைச் சில ஹிந்துக்கள் ஸஹிக்கின்றாரில்லை. ஹிந்துமதத்தை அதில் பிறந்த பிள்ளைகட்குக் கற்பித்த லென்பதைக் கேட்டால், அவர்கட்குக் கர்ணகடோரமா யிருக்கின்றது. ஒருவர் கிறிஸ்தவர் பாடசாலைகளில் ஹிந்து சிறுவர்க்குக் கிறிஸ்தவ மதத்தைப் பலவந்தமாய்ப் போதித்தலைத் தடுக்க முயல்கின்றார். மற்றொரு ஹிந்து அந்த ப்ரயத்நத்தை ஸஹிக்காமல் பேபர்களுக்கு எழுதுகின்றார்.

ஸர்வ மதங்களுடைய ப்ரமாண க்ரந்தங்களிலும் தூஷிக்கத் தக்க அம்சங்கள் உண்டு. ஆயினும், ஹிந்துக்கள் ஸ்வமத விரோதிகளாவதை யொத்து, மஹம்மதியரும் கிறிஸ்தவரும் ஆவதைக் காணோம். ஹிந்து சிறுவர்கள் பொருள் தேடும் வழியென்று நம்பி, இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்து, அருள் தேடும் வழியைத் தம்மட்டும் மூடிவிட்டார்கள்.

---

3209

# தத்வவிசாரம்.

பிறகு இரண்டு ஶ்லோகங்களால், "ப்ரபத்தியையோ, பக்தியையோ, கர்மயோகம் முதலானவற்றையோ, உபாயமாகப் பற்றுகின்ற முமுக்ஷுக்கள் எல்லார்க்கும், தமது ஸ்வரூபத்தையும், தமது ரக்ஷணபலத்தையும் ஸ்ரிய:பதியினிடம் ஸமர்ப்பித்தல் ஸமானமே; பக்தர் முதலானவர்க்கும் ஶேஷத்வாநுஸந்தானமும், பலம் ப்ரதானபலியான ஈஶ்வரனுடையது என்ற அநுஸந்தானமும், வேண்டியதே; அகிஞ்சனன் ரக்ஷணபரத்தையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல் வேண்டும். இது ப்ரபத்தியெனும் அங்கியில் அந்தர்க்கதம்; ப்ரபன்னர்க்குள், மோக்ஷார்த்திகளும், இதர பலார்த்திகளும், ரக்ஷணபரத்தைப் பகவானிடம் ஸமர்ப்பித்தல் வேண்டும்; மோக்ஷத்தை அபேக்ஷித்தவர் மாத்ரம், அதற்கும் மேல்பட்டு, ஸ்வரூப பலங்களையும் ஸமர்ப்பித்தல் வேண்டும்" என்று நிஷ்கர்ஷிக்கின்றார்.

பலார்த்தியாய் உபாயாநுஷ்டானம் பண்ணுகிற ஜீவன் பலியாயிருக்க, ஈஶ்வரன் ப்ரதானபலியாவது, எப்படியென்று ஆக்ஷேபித்து, அசித்தின் பரிணாமங்கள் ஈஶ்வர ஸங்கல்பத்தால் உண்டாவதால், அவற்றின் ப்ரதான ப்ரயோஜனம் ஈஶ்வரனுடையது; ஜீவகர்மாநுகுணமாக அவை உண்டாக்கப்படுவதால், அவற்றின் அவாந்தர பலித்வம் ஜீவனுக்கும் உண்டு; ஜீவனுக்கும் ஈஶ்வரன் தானே கொடுத்த புருஷார்த்தங்களும், ஸர்வஶேஷியான அவனுக்கே உகப்பாயிருக்கையாலே, அவன் ப்ரதான பலியாகின்றான்: இவற்றாலும் ஜீவனுக்கு அவாந்தரபலித்வம் உண்டு: என்றிவ்விதமாக ஸமாதானம் அருளிச்செய்கின்றார்.

பிறகு யாமுநாசார்ய ஸ்தோத்ர விஷயமாகச் சிந்திக்கின்றார். அதில், 22 - வது ஶ்லோகத்தால், ஸ்ரீ ஆளவந்தார், தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், அநந்யகதித்வத்தையும், ஸ்பஷ்டமாகச் சொல்லித் தமக்குப் பக்தியோகாதிகளில் அதிகாரமில்லாமையை

யும் ஆவிஷ்கரித்து, ஶரண்யன் திருவடிகளில் ப்ரபதநம் செய்கின்றார். அதன் தொடர்ச்சியாக, அடுத்த ஶ்லோகத்தால், பகவத்ப்ராப்தி விரோதியாக நின்ற, தமது அநந்தாபராதங்களை ஸ்மரித்து, அவற்றால் பவக்கடலில் மூழ்கி நிற்கும் தமக்குப் பகவான் ஒரு கரையைப் போல் ப்ராப்தமானதையும், அவனது அபார காருண்யமே தம்முடைய ரக்ஷணத்திற்கு முக்யஹேதுவா யிருப்பதையும் அடுத்த 24 - வது ஶ்லோகத்தால் வெளியிட்டு, இப்படிப்பட்ட கருணாநிதியான பகவான், ஶரணாகதனை ரக்ஷியாதொழியான் என்பதை 25 - வது ஶ்லோகத்தாலும், ஶரணாகதனான தாமும் அவன் திருவடிகளை விட்டகல்வதில்லை யென்பதை 26 - வது ஶ்லோகத்தாலும், அவனது திருவடிகளில் நிலைத்த பக்தியை அடைந்த தாம், மற்றொரு ப்ரயோஜநத்தை ஸ்மரிப்பதில்லை யென்பதை அடுத்த ஶ்லோகத்தாலும் விவரிக்கின்றார். அவனது திருவடிகளில், எப்போதாகிலும், யாராலாகிலும், எப்படியாகிலும் ஒரு தரம் ஸமர்ப்பிக்கப்பட்ட அஞ்ஜலி ரூபமான ப்ரபதநம் ஸர்வ பாப நிவாரணத்தை முன்னிட்டுக்கொண்டு, பரமபுருஷார்த்தத்தைத் தந்து அதன் ஸ்வரூபமான கைங்கர்யத்தின் பரம்பரையை ஒழிவில் காலமெல்லாம் நீடிக்கச் செய்யுமென்று, 28 - வது ஶ்லோகத்தால் ப்ரபத்தியின் ப்ராபவத்தை ஸ்துதிக்கின்றார். பின்னால் அக்கைங்கர்யத்துடன் கூடின பகவத்பரிஜநபாவத்தைத் தாம் என்றடைவதென்று, 47-வது ஶ்லோகம் வரையில் சிந்தித்து, 48 - 49-வது ஶ்லோகங்களால், ஸம்ஸாரத்தில் வீழ்ந்து, ஶரணாகதனான தம்மை, க்ருபையால் ரக்ஷிக்கப் பகவானை வேண்டுகின்றார்; 50 - வது ஶ்லோகத்தால் ஶரண்யன் தயைக்குத் தாமே அநுரூபமான விஷயமென்கிறார். தமக்கும் பகவானுக்கும் உள்ள தாஸத்வ ஸ்வாமித்வ ஸம்பந்தம், ஒழிக்கவும் ஒழியா தாகையால், அவன் தயை தம்மை ரக்ஷிக்கவேண்டிய முறையை 51 - வது ஶ்லோகத்தால் வேண்டுகின்றார்.

இதன் பிறகு, 'வபுராதிஷு' என்கிற ஶ்லோகம் வருகின்றது. இதற்கு வேதாந்ததேசிகன் தாத்பர்யம் ஸாதிக்கின்றார்:— ஒரு ராஜா ரத்நத்தை உட்கொண்ட ஒரு பையை முத்ரையிட்டு ஒரு ஸேவகன் கையில் கொடுக்க, ஸேவகனும் உள்ளிருக்கும் மாணிக்கத்தின் ஸ்வரூப ஸ்வபாவங்களை விஶதமாக அறிந்து கொள்ளாமல், அந்த மாணிக்கங்கொண்ட பையை முத்ரையுடன்

மீண்டும் அந்த ராஜாவினிடம் கொடுக்குமாப்போலே, தமது சரீரத்தைக் காட்டிலும் விலக்ஷணனான ஆத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவ ஸ்திதிகளை விசதமாக விவேகிக்கத் திறனற்றவர்கள், தமக்குள்ள அறிவைக் கொண்டு ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினால், அவ்வளவினாலும், அநாதி காலமாகப் பகவத் சேஷபூதமான ஆத்மாவைத் தன்னுடையதென்று அபஹரித்த சௌர்யத்தால் ஸம்பவித்த பகவந்நிக்ரஹம் சமிக்கும் என்கிற சாஸ்த்ரார்த்தத்தில் திருவுள்ளம்; இதற்குமேல், 'ஊ நாய டிவஷி' என்ற ச்லோகத்தில் அந்த ஸமர்ப்பணத்தைப் பற்றி வருந்தியதற்குக் காரணம் என்னெனில், ஸ்வரூபாதி விவேகமின்றிக்கே ஸமர்ப்பிக்கப் புக்காலும், தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப்போலே, தன்னுடையதென்கிற அபிமாநத்துடன் ஸமர்ப்பிக்கில், ஆத்மாபஹார ரூபமான சௌர்யம் அடியற்றதாகமாட்டாதென்பதைத் தெரிவிக்கைக்காகத் தான்; சாஸ்த்ர சோதிதமாகத் தாம் அநுஷ்டித்த ஸமர்ப்பணத்தை அஜ்ஞக்ருதமாக்கினதாக எண்ணக்கூடாது; ஆக, இரண்டு ச்லோகத்தாலும், யதாவஸ்தித ஸ்வரூபாதி விவேகமில்லையாகிலும், 'ஊ' என்று, ஸ்வஸம்பந்த மறுக்கையே, 'ஊ ஊ தவெவாஷிஹ் ஹரஃ' என்கிறபடி, பரஸமர்ப்பண ப்ரதாநமான சாஸ்த்ரார்த்தத்தில், அதாவது எந்த அர்த்தாநுஸந்தாநத்தின் ப்ரயோஜநமாகப் பரஸமர்ப்பணம் இருக்கின்றதோ, அப்படிப்பட்ட சேஷ சேஷிபாவ ஸம்பந்தாநுஸந்தாநத்தில், ஸாரமென்றதாகத் தாத்பர்யம்; இவ்விதமாக சேஷத்வாநுஸந்தாந விசிஷ்டமாக நிற்கும் ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணம் - என்று அருளிச்செய்கின்றார். ஸ்ரீ ஆளவந்தார், தமது ஸ்தோத்ரத்தில், 54-வது ச்லோகம் முதல் தம்முடைய அந்த நிருபாதிக சேஷத்வத்தை ஸ்மரிக்கின்றார். 60-வது ச்லோகத்தில் அந்த ஸ்மரணத்துடன், தான் ப்ரபந்நன் என்பதை கண்டோக்தமாகச் சொல்லி, அதனால் தாமும் பகவானுடைய பரமென்று அருளிச்செய்கின்றார். 63 - வது ச்லோகத்தில் காகாஸுரன் விஷயத்தில் ஸ்ரீராகவன் ப்ரபத்தியெனும் வ்யாஜத்தால் தயை செய்தானென்று, ப்ரபத்திக்கு வ்யாஜரூபமான உபாயத்வத்தை அங்கீகரித்தார். அடுத்த ச்லோகத்தில் தாம் முன் செய்த ப்ரபத்தியை, 'நமவ வெஹஸ்ஷூ டிவ நாய' என்று அநுவ

தித்து, அதன் ப்ரகாரத்தையும், ‘ தவாஸ்மீதி ச யாசதே ’ என்று அருளிச்செய்கிறார். அதாவது, “ ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே । அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ” ॥ என்கிற ச்லோகத்தில் கண்டபடி, பரண்யன் ப்ரதிஜ்ஞையையும், அவன் கொண்ட வ்ருதத்தையும், அதை அநுஸரித்துத் தான் பண்ணின ப்ரபத்தியையும், அந்த ச்லோகத்தில் நேராகக் காட்டி, அக்காரணங்களால், தாமும் பகவானுடைய தயைக்குப் பாத்ரனென் றருளிச்செய்கிறார். ஆதலால் ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்தோத்ரத்தில் ப்ரபத்திக்கு விரோதமான உக்திகள் இல்லை. ஈச்வரன் விதித்த உபாயத்தை அபலாபம் செய்ய ப்ரயத்நமும் இல்லை. அதன் அநுஷ்டாநத்திலும், அதன் பலத்திலும், ஸ்வஸம்பந்த த்யாகபுத்தியைத் தான் ‘ தநாய ’ எனும் ச்லோகம் காட்டுகின்றது.

ஆதலால் ப்ரபத்தியானது சாஸ்த்ரம் காட்டின வழியே, ஸாங்கமாக ஸக்ருத் அநுஷ்டிக்கத் தக்கது. இப்படி ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம் தான் ப்ரபத்தி மந்த்ரங்களில் ப்ரதாநமாக அநுஸந்தேயம் என்பதை, ‘ அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் । மயி நிக்ஷிப்த கர்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி ॥’ “ இந்த மந்த்ரத்தினாலேயே தன் ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பணம் செய்யக்கடவன். என்னிடம் ஸமர்ப்பித்த ஸ்வரக்ஷணபரத்தை யடைந்தவன்தான், க்ருதக்ருத்யன் ஆகின்றான் ” என்று ஸாத்யகி தந்த்ரத்திலே பரஸ்வீகாரம் பண்ணுகின்ற பரண்யன் தானே தெளிய அருளிச்செய்தான். ஸாங்க ப்ரபதநாநுஷ்டாநமிருக்கிறபடியாவது :—கர்த்ருத்வத்யாக மமதாத்யாக பலத்யாக பலோபாயத்வத்யாக பூர்வகமான ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளுடைய அர்த்தாநுஸந்தாநத்துடன், த்வயவசநமுகத்தாலே, ஸ்வரூப பல ந்யாஸ கர்ப்பமான, ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணுகை யென்று ஆயிற்று. கர்த்ருத்வ த்யாக மென்றால்; தான் ப்ரதாந கர்த்தா எனும் எண்ணம் விலகுதல். தன் கர்த்ருத்வம் அவனடி

யாக வந்ததால் அது பராதீந கர்த்ருத்வம். மமதா த்யாகமெனில், அநுஷ்டிக்கப்பட்ட கார்யம் தனதெனும் அபிமாநத்தை விலக்கல். அதன் ப்ரதாந பலமும் தனதெனும் யோசனேயை விலக்குதல் பலத்யாகம். தான் அநுஷ்டிப்பது அந்தப் பலத்தைக்குறித்து ஸாக்ஷாத் உபாயமாகாது; அவ்விஷயத்தில் ஈச்வரனே ஸாக்ஷாத் உபாயம்; அவன் ப்ரஸாத நிமித்தம், அவனிட்ட கட்டளேயில், ப்ரபத்தி, ஓர் வ்யவஹித காரண மென்றறிதல் பலோபாயத்வ த்யாகம். ப்ரபத்யங்கங்களாகச் சொல்லப்பட்ட ஆநுகூல்ய ஸங் கல்பாதிகளுடையவும், அங்கியாகின்ற ஆத்மநிக்ஷேபத்துடையவும் அர்த்தாநுஸந்தாநம் அநுஷ்டாநகாலத்தில் வேண்டும். இவ்வர்த் தங்களே ப்ரகாசிப்பிக்கும் சரணுகதி மந்த்ரமாகிய த்வயம். அதை உச்சரித்துத் தனது ஆத்மாவையும், அதன் ரக்ஷண பலத்தையும், அதன் ரக்ஷண பரத்தையும் தன் ஸம்பந்த மறுத்துப் பகவான் திருவடிகளில் ஸமர்ப்பிப்பது ப்ரபத்தியென்ருகின்றது. அதன் முன்பு ஸ்வாசார்யனேயும், ஆசார்ய பரம்பரையையும், ப்ரணும த்யாநாதிகளால் அடையவேண்டும்.

ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள், உபாயபரிகரங்களாய் ஸக்ருத் அநுஸந்தேயங்களாகிலும், அவை இவன் அநுஷ்டிக்கும் உபாயத் துக்குப் பலனுகச் சரீராவஸாநபர்யந்தம் நிலேத்திருக்கவேண்டும். ஆகையால் இருந்த நாள் வரையில் நிரபராத கைங்கர்யத்தையும், மரணுநந்தரம் மோக்ஷத்தையும் பலமாக வேண்டி ப்ரபத்தி பண் ணுவார்கள் நிபுணர் - என்றிவ்விதமாக ப்ரபத்தி விசாரத்தை முடிக்கின்ருர்.

பத்ராதிபர்.

325

# ஜநகநந்திநீ.

பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளின பிறகு, உத்ஸவம் ஆரம்பித்துப் பத்தாவது தினத்தில் எட்டாவது திருநாள் ஸம்பந்தமான உத்ஸவம் நடந்தது. அன்று மத்யாஹ்நம் நாவல்பாக்கம் ஸ்வாமி பத்மநாபாசார்யருடன் கேசவாசார்யர் க்ரஹத்தை நோக்கி நடந்தார். "பத்மநாபாசார்ய! பிள்ளையாண்டான் கல்யாணத்தில் மிகுந்த குதூஹலத்தைக் காட்டுகின்றானில்லை. ஆனாலும் அவனுக்கு வயஸ் இருபத்திரண்டு ஆய்விட்டது. அவனுடைய விவாஹம் இனி விளம்பிக்கத் தகாது. ஆதலால் அடியேன் வார்த்தையை அவன் கேட்க இசைந்திருக்கின்றான். அபிஜாதரும், ஜ்ஞாதாவும், பரமைகாந்தியுமா யிருக்கப்பட்ட கேசவாசார்யர் ஸம்பந்தம் விசேஷமாகக் கொண்டாடத் தக்கது. பெண்ணினுடைய யோக்யதையைப் பற்றியும், சீலத்தைப் பற்றியும் தேவரீரும் த்ருப்தியாய்ச் சொல்லுகின்றபடியால், ஸக்ருத் அவலோகந மாத்ரத்தால் அடியேனும் அதைத் தெரிந்துகொள்கின்றேன். என்ன ஸாதிக்கின்றது?" என்று ராமாநுஜசார்யர் சொன்னார்.

"இப்படித் தேவரீர்க்கு ஸ்நுஷை கிடைப்பது கஷ்டம். பெண்ணைப் பார்த்தவுடன் தேவரீர் ஸந்துஷ்டராகு மென்பதில் அடியேனுக்கு ஸம்சயம் இல்லை. ஆனால் தேவரீர் குமாரர் ஸ்வ விவாஹ விஷயத்தில் உதாஸீநரா யிருக்கின்றா ரென்பது ஈஷத் சகித ஹேதுவாகின்றது" என்றார் பத்மாநாபாசார்யர்.

"தேவரீர் சகிதப்படுவானேன்? வாசித்துப் புத்திமானாயிருக்கின்ற பிள்ளை கல்யாணமென்றால் வெளிப்படையாக ஸந்தோஷப் படுவனோ? அப்படிச் செய்வதில் அவனுக்கு லஜ்ஜை யுண்டாகாதோ? அவன் மநஸில் கொண்ட எண்ணத்தை ஆவிஷ்கரிப்பனோ? அவன் நடத்தை லோகத்தோடு ஒத்து இருக்கின்றது. அப்படித்தான் புத்திமான்கள் இருப்பார்கள். பிதாவினிடம் மர்யாதை யுள்ள புத்ரர்கள் ஸ்வவிவாஹ விஷயத்தில் பிதாவின்

அபிப்பிராயத்தையே அநுஸரித்து நடப்பர். 'ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி' என்று சக்ரவர்த்தித் திருமகனுடைய சரித்ரத்தில் ஏற்படவில்லையா?" என்றார் ராமாநுஜாசார்யர்.

"தேவரீர் குமாரர் சக்ரவர்த்தித் திருமகனை அநுஸரித்து நடந்தால் போதுமானது. இன்னும் தேவரீர் ஸாதித்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தை யோசிக்கவும். 'குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர்பூயோऽப்யவர்த்தத', என்று, ஸீதையின் ஸௌந்தர்யத்தாலும் கல்யாணகுணங்களாலும் ராமனுக்கு அவளிடம் ப்ரீதி மேன்மேலும் வ்ருத்தியடைந்ததென்று தெரிகின்றதே. கேசவாசார்யர் கந்நிகையினிடம் தேவரீர் குமாரர்க்கு ப்ரீதி வளரும்படி ரூபமும் குணமும் ஏற்பட்டேயிருக்கின்றது" என்றார் பத்மநாபாசார்யர்.

இப்படி ஸம்பாஷித்துக்கொண்டே போய்க் கேசவாசார்யர் இல்லம் வந்து சேர்ந்தார்கள். அங்கே நடைத்திண்ணைமேல் உட்கார்ந்திருந்த கேசவாசார்யர் இவர்களைப் பார்த்தவுடன் எழுந்திருந்து "எழுந்தருளவேண்டும்" என்று சொன்னார். மூவரும் திண்ணையில் உட்கார்ந்தனர். "அன்று ஸாதித்தவண்ணம் ஸ்வாமி எழுந்தருளிவிட்டார்," என்று பத்மநாபாசார்யர் சொல்லிவிட்டு உள்ளே சென்று ஒரு தட்டு வாங்கிக்கொண்டு வந்தார். அதில், ராமாநுஜாசார்யர் கொண்டுவந்த வெற்றிலை, பாக்கு, மஞ்சள், புஷ்பம், பழம், வஸ்த்ரம் இவற்றையெல்லாம் வைத்தனர்.

"பகவான் ஜலக்ரீடைக்கு ஸந்நாஹமாய் எழுந்தருளியிருக்கின்றான். தேவிகளுடன் அவன் மஞ்சனமாடிக் களித்ததும், விசேஷித்து, அவர் திருவடிகள் ஸம்பந்தத்தால் பாவநதமமாகப் பண்ணப்பட்டதுமான தீர்த்தத்தை அபேக்ஷித்து ஸந்நிதிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றார்கள். தேவரீர் குழந்தை சற்று இங்கே வருவளோ? அவள் கையில் ஒரு தாம்பூலம் கொடுத்துவிட்டு ஸந்நிதிக்குப் போவோம்" என்று சொன்னார் ராமாநுஜாசார்யர்.

"பாக்யம்", என்று சொல்லிவிட்டுக் கேசவாசார்யர் எழுந்து உள்ளே நடந்தார். ராமாநுஜாசார்யர் வரப்போகின்றார் என்று

கேசவாசார்யர் எதிர்பார்த்த போதிலும், அவர் வந்த ப்ரகாரத்தை யும், ஸமயத்தையும் அவர் எதிர்பார்த்தாரில்லை. ஆதலால் அன் றையதினம் வெள்ளிக்கிழமை யென்று, ஜநகநந்தினி ஸ்நாநம் செய்த வண்ணம் க்ரஹவ்யாபாரங்களில் வ்யாஸக்த மனத்தினளாய் இருந் தாள். பிதாவால் அழைக்கப்பட்டபோது, தன் தேஹத்தை விசே ஷமாக அலங்கரிக்க அவகாசமற்று நின்ருள்.

‘ 𑌶𑍍𑌰𑌮𑌾𑌮𑍍𑌭𑌃 𑌶𑌿𑌶𑌿𑌰𑍀𑌭𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌮𑌨𑍍𑌦 𑌮𑌨𑍍𑌦𑌾𑌕𑌿𑌨𑍀
𑌮𑌰𑍁𑌤𑍍 𑌤𑌰𑌲𑌿𑌤𑌾𑌲𑌕𑌾 𑌕𑍁𑌲𑌲𑌲𑌾𑌟𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌤𑌿 ।
𑌅𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌕𑌲𑌙𑍍𑌕𑌿𑌤𑍋 𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌕𑌪𑍋𑌲 𑌮𑍁𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇
𑌨𑌿𑌰𑌾𑌭𑌰𑌣 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌶𑍍𑌰𑌵𑌣𑌪𑌾𑌶 𑌸𑍁𑌭𑌗𑌂𑌮𑍁𑌖𑌮𑍍 ’।

“ஶ்ரமப்பட்டதால் உத்பந்நமான வேர்வை ஜலத்தால் குளிர்ச் சியை அடைவிக்கப்பட்டதும், மந்தாகிநியினின்று உண்டாகி மந் தமா யடிக்கின்ற காற்றினல் நாற்புறமும் சலிக்கின்ற முன்னெற்றி மயிர்களால் ஈஷத் மறைக்கப்பட்டதுமான நெற்றிக்கட்டாகின்ற சந்த்ரனுடைய காந்தியுடன் கூடினதும், குங்குமப்பூவின் பூசுத லால் உண்டாகும் களங்கமற்று ப்ரகாசிப்பதுமான கபோலத்து டன் கூடியதும், ஆபரணமற்றிருந்தும் ஸுந்தரமான செவிகளு டன் கூடிக் கண்களுக்கு ரம்யமானதுமான முகமானது காணப் பட்டது” என்று ரகுவீரன் ஸீதையை ஸ்மரித்துச் சொன்ன தாக மஹாகவி வாக்ய மிருக்கின்றபடித் தன் புத்ரி தோன்றியும், ‘ 𑌕𑌿𑌮𑌿𑌵𑌹𑌿 𑌮𑌧𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌨𑌂 𑌨𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 ’ “மதுரமான ஆகா ரங்களுக்கு எதுதான் அலங்காரமாகாது?” என்றும், “𑌆𑌭𑌰𑌣𑌸𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌧𑌨𑌵𑌿𑌧𑍇𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌧𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌃”, “ஆப ரணத்துக்கும் அவள் ஆபரணமாயிருக்கின்ருள், அலங்கார வ்யா பாரத்துக்கும் அவள் அலங்காரமாயிருக்கின்ருள்” என்றும், காளி தாஸன் வர்ணித்தபடியே, மற்ருேரணி வேண்டாமல் மதுரமான தோற்றமுடைய தன் குமாரியை, அலங்கார விதாநாபேக்ஷையின் றித் தன்னகத்து நடைக்குக் கேசவாசார்யர் அழைத்துக்கொண்டு போனர். “ஸ்வாமிக்குத் தண்டன் ஸமர்ப்பி” என்று அவர் சொல்

வதற்குள், ராமாநுஜசார்யரையும், பத்மநாபாசார்யரையும் தனித் தனியே ஜநகநந்தினி ஸேவித்தனள்.

இப்படி வணங்கிநின்ற கன்னிகையை ராமாநுஜாசார்யர் பார்த்தார். வானமும் சசியும் வளம் நீங்கவே, வாய்ந்த கூந்தலில் வைத்த முகத்தினளும், கானவர்படை கண்டதோர் மானெனக் காட்சி தந்திடும் கண்ணினளுமான அப்பெண்மணியை நோக்கவும், விஸ்மயமும் ஸந்தோஷமும் ஒன்றுகூடி மனம் நிறைந்து வெளிப் பட்ட வதநத்துடன் கூடினவராய், மந்தஸ்மிதராய்ச் சிறிதுகாலம் பார்த்துவிட்டு, "பேரருளாளன் உனக்கு ஸர்வமங்களமும் உண் டாக்கட்டும்", என்று சொல்லி, மேலேகுறித்த பலபுஷ்பாதிக ளடங்கிய தாம்பூலத் தட்டை அவளிடம் கொடுத்தனர். ஜநகநந்தி னியும் அதைக் கைநீட்டி வாங்கிக்கொண்டு உள்ளேசென்று ஹரி ப்ரியையினிடம் கொடுத்தாள்.

"கேசவாசார்ய ! அடியேனுக்கு மிகவும் த்ருப்தியாயிருக்கின் றது. இது எதிர்பார்த்த விஷயமே. அடியேனுடைய மநஸ் மிக வும் ஸந்துஷ்டமா யிருக்கின்றது. தேவரீர் குமாரத்தியின் நக்ஷத்ர மென்ன ?" என்று சொன்னார்.

அதற்குக் கேசவாசார்யர், "அவள் நக்ஷத்ரம் உத்தர பல் குநீ" என்றனர்.

"பிள்ளையாண்டான் நக்ஷத்ரம் ச்ரவணம். நல்ல பொருத்த மாய் அமைந்திருக்கின்றது. வேறொன்றும் விசாரிக்க வேண்டிய தில்லை. தேவரீர் முகூர்த்தத்தை நிச்சயித்து முகூர்த்த பத்ரிகை அனுப்பிவிடலாம்", என்று சொல்லிவிட்டு ராமாநுஜாசார்யர் எழுந்தார். மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். "ஸந்நிதிக்கு எழுந்தருளவில்லையா ?" என்று கேசவாசார்யரைப் பத்மநாபா சார்யர் கேட்டனர்.

"முன்னே ஸ்வாமிகள் எழுந்தருளினால், இதோ பின்னே வந்துகொண்டே இருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டுக் கேச

வாசார்யர் உள்ளே சென்றனர். மற்றவர்கள் ஆலயத்துக்குச் சென்றார்கள்.

“ஜநகம்! அந்த ஸ்வாமியின் குமாரருக்கு உன்னைத் தாநம் செய்ய நிச்சயித்திருக்கின்றேன். உனக்கு ஏதாவது சொல்லவேண்டுமோ? இருந்தால் சொல்” என்றனர் கேசவாசார்யர்.

“அப்பா! தேவரீர் திருவுள்ளப்படி நடப்பதுதான் அடியேன் ஸ்வரூபம். அதுதான் அடியேனுக்கு ஸந்தோஷம் தரக்கூடியது. தேவரீர் செய்வதில் அடியேன் யுக்தாயுக்த விசாரம் செய்யத்தகுமா? தேவரீர் அடியேனுக்காக வரித்த புருஷனைப் பர்த்தாவாகப் பகுமாநித்து, த்ருப்தியோடு பரிஶுஶ்ரூஷை செய்வேன். தேவரீர் அந்த விஷயத்தில் கிஞ்சித்தேனும் ஸம்ஶயப் படவேண்டாம்” என்று சொன்னாள் ஜநகநந்திநீ.

பிறகு கேசவாசார்யர் கோவிலுக்குச் சென்றார். அன்று மத்யாஹ்நம் வரதன் திருப்பாய்ந்தாடித் திருமஞ்சநம் கண்டருளுகின்றான் என்பார். இது ஸேவார்த்திகள் முன் நடப்பதன்று. அவர், இது பகவான் நடத்தியதாகப் பாவிக்கமாத்ரம் அதிகாரிகள். பாய்ந்தாடும் மஞ்சநம் ஜலக்ரீடை. இதை யமுனைத்துறைவன் யமுனையாற்றிலே கோபஸ்த்ரீகள் களிக்க அவர்களுடன் சேர்ந்து நடத்தினானென்று ஸ்ரீபாகவதம் சொல்லும். வஶீக்ருத ஸ்வமாயையை அதிஷ்டிதனாய்க் கொண்டு, அம்மாயையால் ஸர்வபூதங்களையும் ப்ரமிக்கச்செய்யும் பரமேஶ்வரன், ராஸக்ரீடை, ஜலக்ரீடை முதலான திருவிளையாட்டுகளை நிஜமாகச் செய்தருளினானோ, அவ்வண்ணம் கோபஸ்த்ரீகளுக்குக் காட்டியருளினானோ, இரண்டுமின்றி இக்கதை, தன்னை ஆஶ்ரயித்துப் பரவப் பார்த்துக் களிக்கின்றானோ, யாமறியோம். அவாப்த ஸமஸ்த காமனுக்கு, ராஸக்ரீடாதிகளால் என்ன அபூர்வமான ஆநந்தம் உதிக்கப்போகின்றது? “அநுக்ரஹாய பூதாநாம் மாநுஷம் தேஹமாஶ்ரித꞉ । பஜதே தாத்ருஶீ꞉ க்ரீடா யா꞉ ஶ்ருத்வா தத்பரோ பவேத்” ॥ என்கிறபடி, லோகாநுக்ரஹார்த்தமாக, மர்த்யர்க்குள்

அவதாரம் செய்த ஶௌரண்யன், மேலேசொன்ன க்ரீடைகளில் அந்வயித்தவனெனத் தன்னைக் காட்டினன்; ஏனென்றால், அந்தக் கதைகளைக் கேட்டாவது, மர்த்யர் தன்னடியை ஆஶ்ரயிக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றினன் ஸர்வேஶ்வரன். வ்ரஜக்ரஹங்களில் வஸித்த புருஷரனைவரும், ஸ்வக்ரஹங்களில் ஸ்வஸ்த்ரீகளெல்லாரும், அவ்வவர்க்குரிய வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தராய் நிற்கக் கண்டுகொண்டிருக்கையில், அந்த ஸ்த்ரீகளே தனது ஸாமீப்யத்தை அடைந்தவர்களாய் நினைத்துக் கொள்ளும்படி விளையாடும் லோகநாதன் செயலை யார்தான் இப்படியென்று அறியக்கூடும்? இந்த விளையாட்டில் அந்வயிக்கத் தன்னிருபுறமும் நின்ற தேவிமார்களுக்கு இடமற்றுப்போக, அவர்க்கும் அரியதோர் க்ரீடாரஸத்தை ஸர்வஸங்க பரித்யாக பூர்வமாகத் தன்னையடைந்த வ்ரஜாங்கனைகட்குத் தந்தருளிய பெருமானைத் தமக்கும் அதைத் தர, அவர் வேண்டத் தந்தருளுகின்றானோ அறியோம். அவனுடைய ஸர்வேஶ்வரத்வம் நிஸ்ஸம்ஶயமாக விளங்க, "ஹ்ரீஶ்ச தெ லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று ஶ்ருதி சொல்லிற்று. ஸந்தர்ப்பமறியாத குத்ருஷ்டிகள் ஹ்ரீசப்தத்தை லஜ்ஜாபிமானி தேவதை யென்று பொருள் படுத்துவர். லஜ்ஜைக்கும் அபிமானிதேவதையொன்றை அவர்வேண்டுவார் போலும். தே எனும் சப்தம், தவ என்று ஸ்படமாய் விளங்க, அதற்கு அபார்த்தம் சொல்லுவர். ஆதலால் பத்நீசப்தத்திற்கும் அபார்த்தம் பண்ணுவர். "எனது அபரையான ஜடப்ரக்ருதியை அறி. ஜீவரூபையான எனது பராப்ரக்ருதியையும் அறி" என்று கீதையில் கண்ணனால் உரைக்கப்பட்டும், "ஸர்வபூதங்களிடமும் உள்ள த்ரிகுணாஶ்ரயையான உனது அபரையான ஶக்திக்கும், இந்த்ரியங்களுக்கும், வாக்குக்கும், மநஸுக்கும் எட்டாதவளும், ஜ்ஞாதாக்களா லறியத்தக்கவளுமான ஜீவாபிமானியான பரமேஶ்வரியையும் நமஸ்கரிக்கின்றேன்," என்று புராணரத்நத்தில் ப்ரஹ்லாத ஸ்துதியில் வர்ணிக்கப்பட்டுமிருக்கும், சித், அசித், இரண்டுக்கும் அபிமானி தேவதைகளான ஶ்ரீ தேவியையும் பூதேவியையும் என்றும் தன்னிருபுறமும்கொண்டு,

தன் பாரமைச்வர்யத்தை ப்ரகடநம் செய்யும் பேரருளாளன், அந்தத் தேவிகளுடன் அன்று ஜலத்தில் பாய்ந்தாடினன் போலும். அப்படித் தன்னுடையவும் தன் தேவிமார்களுடையவும் திருமேனி ஸம்பந்த மடைந்த திவ்யதீர்த்தத்தை ஸேவார்த்திகளுக்கு அநுக்ரஹித்துத் தந்தனன்.

அவ்வநுக்ரஹமும் விபலமாகும்படி ஸ்ரீவைஷ்ணவரென்று பெயர்வஹித்த பலர், கோஷ்டியாக நின்றுப் பகவத்கிங்கரர் ஒவ்வொருவரிடமும் சென்று தீர்த்தம் ஸாதிக்குமட்டும் பொறுமையற்றவராய், ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தீர்த்தம் ஸாதிப்பவரைக் கஷ்டப்படுத்தித் தீர்த்தம் தமக்குமின்றி, அயலார்க்கும் இல்லாமல் போகும்படி செய்கின்றூர்கள். ஸத்வ ப்ரதாநராகப் பிறந்தவர், ப்ராஹ்மணரெனும் க்யாதியை நியமேந கெடுத்தாராகில், அவர் ஜந்மத்தைப் பற்றிச் சங்கிக்கவும் நேரிடும்.

ஸந்நிதியினின்று ஸ்ரீவைஷ்ணவர் திரும்புங்கால், மாதவாசார்யர் கேசவாசார்யரைப் பார்த்து, "கேசவாசார்ய! குழந்தைக்குவிவாஹம் நிச்சயமானதாகக் கேள்விப்பட்டேன். 'ஶுவீநாம் ஸ்ரீமதாம்கெஹெ' தேவரீர் கந்நிகை வாழ்க்கைப்படப் போகின்றுளென்று விசேஷேண ஸந்தோஷமா யிருக்கின்றது" என்று சொன்னர்.

"எல்லாம், பரரண்யன் க்ருபையை அநுஸரித்த அவனுடைய ஸங்கல்பாதீநமாக நடக்கின்றது," என்றனர் கேசவாசார்யர். இதற்குள் இவர்கள் நின்றவிடம் தேடி, ராமாநுஜாசார்யரும், பத்மநாபாசார்யரும் வந்து சேர்ந்தார்கள். ஸ்வாமிந்! பெருமாள் அத்புதமாய் ஸேவை ஸாதிக்கின்றனர். கோபாலன் திருவிளையாட்டைப் பாகவதர்க்குக் காட்டும்போது, கோபலனக ஸேவை ஸாதிக்கின்றுன். ஆனல் ஸேவார்த்திகள் யாவரும் த்ருப்தியாகத் தர்சிக்க அவகாசம் கொடுக்கவில்லை. அதற்குத் தக்க ஸௌகர்யத்தை ஸந்நிதி விசாரணைகர்த்தர்கள் பண்ணிக்கொடுக்க வேண்டும்," என்று சொன்னர் ராமாநுஜாசார்யர்.

இதற்குக் கேசவாசார்யர் ப்ரத்யுத்தரம் அளித்திலர். மாதவாசார்யர், "ஸந்நிதி தர்மரக்ஷகர்கள் என்ன செய்யலாம்? இந்த மூடஜநங்களைக் கடாக்ஷிக்கவும். யாவருக்கும் கிடைக்க வேண்டியதும் கிடைக்கக்கூடியதுமான பகவத் ப்ரஸாதத்தை யாருக்கும் கிடைக்க வொட்டாமல் செய்கின்றனவே. இவர்களை அடிப்பதா, திட்டுவதா, என்ன செய்யலாம்? விசாலமான இந்த மண்டபத்தின்கண் எல்லாரும் வரிசையாக நின்றிருந்து, அவ்வவர் ஸ்தாநத்தினின்று பெருமாளை ஸேவிக்கவும், பெருமாள் தீர்த்தத்தை வாங்கிக் கொள்ளவும் கூடாதா? இவருடைய அஜ்ஞாநம் விசாரணைகர்த்தர்கள் அதிகாரத்துக்கும் அதிக்ரமித்த விஷயம்" என்று சொன்னார்.

அதன்பிறகு எல்லாரும் அவ்வவர் இல்லங்கட்குச் சென்றனர். அன்று அஸ்தமனத்திற்குப் பெருமாள் குதிரைவாகனத்தின் மேல் ஸேவை ஸாதித்தனர். இந்த ஸேவை தேசிகனால் கொண்டாடப்பட்டது. வழியில் கலியனுக்குப் பகவதநுக்ரஹம் ப்ராப்தமானபடியை நம்மவர்க்குள் வழங்கும் கதையின் ப்ரகாரம் நடத்திக் காட்டுகின்றனர். திருமங்கைமன்னன் பாசுரங்களைப் படித்த பின், படித்தவர் சித்தங்களில் அந்த மஹானுடைய நற்குணங்கள் ஒருவாறு ப்ரதிபலிக்கின்றன. அவற்றைச் சிந்தித்துக் கதையையும் பராமர்சித்தால், அக்கதை அவர்க்குப் பொருந்துமா வென்று புத்திமான்கள் யோசிக்கத்தக்கதே. கதைகளுக்குக் காலில்லை யென்பர். இராமாநுசன் அவதாரகாலத்தில் ஹிமாசலம் முதல் ஸேது பர்யந்தம், துலுக்கருடைய ஆளுகை முதலே இல்லை யென்பது சரித்ரத்தால் ஸ்பஷ்டம். யதீந்த்ரன் நித்யவிபூதியை அலங்கரித்து 50, 60 ஸம்வத்ஸரம் ஆனபிறகன்றோ டில்லிநகராண்ட ப்ருத்விராஜனும், கந்யகுப்ஜாதிபனான ஜயசந்த்ரனும், மஹம்மத்கோரி யெனும் துலுக்க மன்னனால் கொல்லபட்டு, அவர் ராஜ்யங்கள் துலுக்கர் வசமாயின? ஆதலால், பாஷ்யகாரர் காலத்தில் துலுக்கர் நம்தேசம் வந்திலர். ஸம்பத்குமாரனை அவர் கொண்டு போயிலர். பெருமாளை மீட்டுக்கொண்டுவர, பாஷ்யகாரர்

டில்லிக்குச் செல்ல ஸந்தர்ப்பம் நேரிட்டிலது. அவ்விடம்நின்று அவர் திரும்பினதாவது, திரும்புகால் அவர்க்கு யாதொரு பய ஹேது உண்டானதாவது யோசனைக்குக் கிட்டவில்லை. வெள்ளை சாற்றுபடிக்கும் வ்யாஜம் உண்டானதில்லை. பஞ்சமர் சேரிக்குப் போகவும் அவஸரமில்லை. துலுக்கநாச்சியா ரொருத்தி யாத வாத்ரிக்கு அக்காலம் வரவும் வழி யேற்படவில்லை. பஞ்சமரைக் கோவிலுக்குள்விடக் காரணமும் உதிக்கவில்லை. காரணமின்றி மேலேவிவரித்தபடிக் கதையொன்று ஏற்படவில்லையா? அப்ப டியே திருமங்கைமன்னன் க்யாதிக்கு விரோதமாகக் கதையொ ன்று கட்டிவிட்டாரெனத் தகாதா? தன்னுடைய நைச்யாநுஸந் தாந விவரணமாகத் திருமங்கைமன்னன் பாசுரங்கள் பாடினரா யின் அவரைத் தீவட்டிக்கொள்ளைக்காரனுக்கி விடவேண்டுமோ? பண்டைநாள்களில் மதபேதம் த்வேஷகாரண மாயிற்றென்பது ஸித்தம். அத்யாபி அந்த மூடத்தனம் புத்திமந்தர் என்போர் பல ரை விட்டதன்று. ப்ராயேண மதப்ரவர்த்தகர் எனப்பட்ட பல ரும் இந்த ரூபமான குற்றத்தை விலக்கினவர்க ளல்லர். ஆதலால் மங்கையர்கோன், சமணர் சாக்கியர் முதலானோர் பொருள்களைப் பகவத் கைங்கர்யநிமித்தம் பலாத்காரமாகக் கொண்டாரெனும் கதையை ஒருவிதமாக ஒப்புக்கொண்டாலும், ஸ்வஜநங்கள் விஷயத் திலும் அப்படி நடந்தாரென்பதை யாம் எங்ஙனம் விச்வஸிக்கக் கூடும்?

காளமேகனெனும் கவி, தேவாதிதேவன் திருக்கச்சியூருடை யான் மாவேறி வீதிவரக் கண்டு, ஓர் பெண் மணிக்கு அரையிலுடு த்த வாடையானது பட்டு, காலில் பாய்ந்ததென்று ஒரு வெண்பா பாடினன். இந்த யோசனை பெருமாளுடைய ஸௌந்தர்யாதிசய த்தைக் காட்டுகின்றது. இந்தத் தோற்றத்துடன் பரிமேலழகன் முரங்கன்வீதி யோடிக் கச்சிவீதி யலங்கரித்து, ஒருமாவின் கீழர்க் குத் தர்சநம் தந்து, பிறகு மண்டபமேற வெழுந்தருளி, மீண்டும் அங்குநின்று புறப்பட்டுத் தன் திருக்கோவில் எழுந்தருளினன்.

**பத்ராதிபர்.**

334

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஹதாகிலக்லேஶமலை: ஸ்வபாவத-
ஸ்த்வதானுகூல்யைகரஸைஸ்தவோசிதை: |
க்ருஹீததத்தத்பரிசாரஸாதனை-
ர்நிஷேவ்யமாணம் ஸசிவைர் யதோசிதம் || 43.

---

நமது ஸித்தாந்தம். ஆனாலும், விக்ரஹத்திலும் அதிகாரத்திலும் இப்படிப்பட்ட வைஷம்ய முண்டு; அது போகத்திலாவது ஜ்ஞானத்திலாவது எவ்வித தாரதம்யத்திற்கும் காரணமாகாது; அது பகவானுடைய நித்யேச்சா ஸித்தம் என்று நாம் அறியவேண்டும்.

43. அநந்த கருட விஷ்வக்ஸேநர் நீங்கலாக எப்பொழுதும் பகவானுக்குக் கைங்கர்யத்தைச் செய்துகொண்டு ததேகருசிகளாய்க் காலங் கழித்துவரும் வேறு நித்யஸூரிகள் அநேக ருண்டு. அவர்களுடைய தாஸ்யைக ஸம்ருத்தி இவ்விடத்தில் அநுஸந்திக்கப் படுகின்றது. "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்பதன்றோ பரம பக்தர்களுடைய ப்ரார்த்தனை?

ஸ்வபாவதோ ஹதாகிலக்லேஶமலை: த்வதானுகூல்யைகரஸை: தவோசிதை: க்ருஹீததத்தத்பரிசாரஸாதனை: ஸசிவை: யதோசிதம் நிஷேவ்யமாணம் [அநாதிகாலமாக எவ்வித க்லேஶ மலங்களும் அற்றவர்களாகவும், ஸ்வபாவத்திலேயே உன்னுடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்வதையே போக்யமாக அநுபவிக்கிறவர்களாகவும், ஸ்வரூப ரூப குணங்களி

ஞல் உனக்கு அநுரூபர்களாக இருக்கிறவர்களாகவும், சத்ரம் சாமரம் முதலிய கைங்கர்யோசித பரிகரங்களை ஆதராதிஶயத்தால் கைவிடாமல் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கிறவர்களாகவு முள்ள உன்னுடைய ஸசிவஸமூஹங்களால் யதோசிதம் ஸேவிக்கப்படாநின்றுள்ள உன்னை.]

ஸ்வபாவதஃ - இயற்கையாகவே; அதாவது- ஒருகாலும் இவர்களிடம் க்லேஶ மென்பதே இல்லை யென்று தாத்பர்யம். கர்ம பத்தர்களாக இருக்கும் ஸம்ஸாரிகள் ஒருகால் க்லேஶங்களால் ஆக்ராந்தர்களாகி, பிறகு உபாயத்வாரா அவைகளில்நின்றும் நிவ்ருத்தராகிறார்கள்; இவரோ, ஒருபொழுதும் க்லேஶத்தினல் தொடப்படாதவர் என்பது தாத்பர்யம். இந்த 'ஸ்வபாவதஃ' என்னும் பதத்தை 'ஹதாகிலக்லேஶமலைஃ' என்பதோடு சேர்ப்பதுபோல, 'ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶிதைஃ' என்பதோடும் சேர்க்கலாம். அப்பொழுது, ஸத்தா ப்ரயுக்தமாகவே உன்னுடைய கைங்கர்யத்தில் அவர்களுக்கு ருசி யென்று அர்த்தம் கொடுக்கும்.

ஹதாகிலக்லேஶமலைஃ - நிர்தூதங்களான ஸகலவிதக்லேஶங்களையும் மலத்தையும் உடைத்தாயிருக்கிறவர்கள். க்லேஶங்கள், ஐந்து வகைப்பட்டவை; அவையாவன - அவித்யா, அஸ்மிதா (அதாவது - அஹந்தை), ராகம், த்வேஷம், அபிநிவேஶம். 'மலம்' என்பதற்கு - ப்ரக்ருதி ஸம்பந்தம் என்று அர்த்தம். இப்படிப்பட்ட க்லேஶங்களும் ப்ராக்ருதிஸம்பந்தமும் அற்றவர்கள் என்பது தாத்பர்யம். ப்ராக்ருதிஸம்பந்தம் இருக்கும் இடங்களிலெல்லாம் இந்த க்லேஶங்கள் இருக்கிறபடியால் இவை இரண்டையும் வெவ்வேருகப் படிப்பது ஸரியன்று என்று நினைக்கக்கூடும். அந்த ஶங்கைக்கு இடம் கொடாமல், 'க்லேஶங்களாகிற மலத்தை' என்றும் வாக்யார்த்தம் சொல்லலாம்.

ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶிதைஃ - உனக்கு அடிமை செய்வதிலேயே எப்பொழுதும் ருசியை உடைத்தாயிருக்கிற. பகவா

னுக்கு அடிமை செய்வது தான் பரம போக்யம் என்று தாத்பர்யம்; இது, முக்தர்களுக்கு ஏதோ ஒருநாள் தொடங்கி ஏற்பட்டிருக்கின்றது; நித்யருக்கு அநாதிகாலமாக ஸத்தா ப்ரயுக்தமாகவே இருக்கின்றது.

தவொவிவெதெஃ - அநாதியாக ஸர்வஜ்ஞர்களா யிருக்கிறபடியாலும், அப்ராக்ருத விக்ரஹம் முதலியவற்றை யுடையவர்களா யிருக்கிறபடியாலும், உனக்கே அநுரூபர்கள் என்பது கருத்து.

மூஹீதததுதஸிவாரஸாயவெநெஃ - சத்ர க்ராஹிகள், த்வாரபாலர்கள் முதலிய நித்யர்கள் பலருண்டு. அவரவர்கள் தங்கள் தங்கள் கைங்கர்யத்துக்குத் தகுந்த ஸாதநங்களைக் கையில் பிடித்தே நிற்கிறார்களாம்.

ஸவிவெஃ - மந்த்ரிகளால். நித்யஸூரிக ளெல்லாரும் பகவானுக்கு மந்த்ரி ஸ்தாநீயராகிறார்கள் என்பது கருத்து. அதாவது - ஒரு மஹாராஜனுக்குப் பல மந்த்ரிகள் பல பல விபூதி ஶேஷ நிர்வஹணத்தில் நியுக்தர்களாக இருப்பது போல, பகவானுக்கும் ஆஸந்ந ஸேவையிலும் அந்தந்த விபூதிஶேஷ நிர்வஹணத்திலும் நியுக்தர்களாக இருக்கிறார்கள் ஸகல நித்யர்களும். ஆகையால், அவர்கள் 'ஸவிவாஃ' என்று இவ்விடத்தில் வ்யவஹரிக்கப் பட்டிருக்கிறார்கள். "வாத்ஸல்யத்தாலே அவன் முறையழியப் பரிமாற நினைத்தாலும் அவனை முறையுணர்த்தி அடிமை செய்யுமவர்கள் நீதிவானவரிறே. ஆஶ்ரித ரக்ஷணத்தில் தேவரை ப்ரேரிக்கு மவர்களிறே" என்பது, ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் ஹ்ருதயங்கமமான வ்யாக்யாநம்.

யமொவிதம நிஷெவஹாணம - அந்தந்த அதிகார நியோகத்திற்கும், ஸேவ்யனுடைய அபிப்ராயத்திற்கும், தமக்கு இயற்கையாயுள்ள தாஸத்வத்திற்கும் தக்கபடி ஸேவிக்கப்படாநின்றுள்ள (உன்னை).

அபூர்வநாநாரஸபாவநிர்ப்பர
ப்ரபத்தயா முக்தவிதக்த லீலயா ।
க்ஷணாணுவத் க்ஷிப்த பராதிகாலயா
ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபுஜம் ॥ 44.

---

44. இப்படிப்பட்ட பகவான், தனது ஸர்வ வ்யாபாரங்களிலும் பிராட்டியை நாநாரஸங்களால் உகப்பித்துக் கொண்டிருக்கிறான். நமது ஸித்தாந்தத்தில், அவாப்தஸமஸ்த காமனாயும் பரிபூர்ணனாயுமுள்ள பகவான், தனது ஸங்கல்ப மாத்ரத்தால் விசித்ர சிதசிந் மிஶ்ரமான இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதும், ரக்ஷிப்பதும், த்வம்ஸம்செய்வதுமான இந்த வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருப்பது முழுவதும் லீலார்த்தமே என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸப்தத்வீபங்களுக்கு அதிபதியாயும் ஸம்பூர்ணமான ஸௌர்ய வீர்ய பராக்ரமங்களை யுடையவனாயுமுள்ள ஒரு மஹாராஜன் கேவலம் லீலார்த்தமாகவே கந்துகம் முதலிய க்ரீடைகளில் எப்படி ப்ரவ்ருத்திக்கிறானோ, அப்படியே ஸர்வேஶ்வரனும் கேவலம் லீலையை முன்னிட்டே ஜகத்வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கிறான் என்பது நிர்துஷ்டமே. பகவான் இந்த வ்யாபாரங்களனைத்தையும் பிராட்டியுடன் கூடியேசெய்துகொண்டு அவளை உகப்பித்து அதனால் பெரியதொரு ஆநந்தத்தை அநுபவித்து வருகிறான் என்பது தான், இந்த ஶ்லோகத்திற் செய்யப்படும் அநுஸந்தாநம். தனிமையாக இந்த வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்தால் அப்படிப்பட்ட ப்ரவ்ருத்தி ரஸவத்தாகாதன்றோ? இந்த அர்த்தத்தை, பஞ்சஸ்தவத்தில் ஒன்றாகிய ஸ்ரீ ஸ்தவத்தில்

"ஸ்வஸ்தி ஸ்ரீர் திஶதாத் அஶேஷஜகதாம் ஸர்கோபஸர்கஸ்திதீ: ஸ்வர்க்கம் துர்க்கதிம் ஆபவர்க்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி: । யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே அகிலம் க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாத் ஐகரஸ்யாத் தயா ॥"

என்று ஸ்ரீ கூரத்தாழ்வான் அநுஸந்தித்திருக்கிறார். ஸமஸ்த சிதசிந் மிஶ்ரமாயுள்ள இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது முதலிய வ்யாபாரத்தில் பகவானுக்கு ஏற்படும் வ்யஸநத்தை, ஆநந்தாதிஶயத்தை ஸூசிப்பிக்கும் தனது கடாக்ஷங்களினால் பிராட்டி ரஸவத்தாகச் செய்கிறாள் என்று,

“𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌸𑌮𑌸𑍍𑌤𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌵𑍍𑌯𑌸𑌨𑌂 𑌹𑌰𑍇𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑌾𑌰𑌿𑌭𑌿𑌰𑌾𑌲𑍋𑌕𑍈𑌃 𑌸𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍈 𑌕𑍃𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ॥”

என்னும் ஸ்ரீகுணரத்நகோஶத்தின் ஆதிம ஶ்லோகத்தினால் ஸ்ரீ பட்டரும் அநுக்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனும், ஸ்ரீ ஸ்துதியில்,

“𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌷𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌷𑍁 𑌪𑌰𑌿𑌤𑌃 𑌸𑍂𑌰𑌿𑌬𑍃𑌨𑍍𑌦𑍇𑌨 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂
𑌮𑌧𑍍𑌯𑍇𑌕𑍃𑌤𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌫𑌲𑌕𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌭𑍇𑌦𑌂 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑍀𑌶𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑌿 ! 𑌸𑌦𑌾 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌦𑍍𑌯𑍂𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍌
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌶𑌾𑌦𑍍𑌯𑌾 𑌦𑌧𑌤𑌿 𑌯𑍁𑌵𑌯𑍋𑌰𑌕𑍍𑌷𑌶𑌾𑌰𑌪𑍍𑌰𑌚𑌾𑌰𑌂 ॥”

என்னும் ஶ்லோகத்தில், இந்த ஜகத் வ்யாபாரத்தை ஒரு சொக்கட்டான் விளையாட்டுப் போலவும், ப்ரக்ருதியைச் சொக்கட்டான் பலகை போலவும், ஸத்யலோகம் முதலிய லோகங்களை அதன் கட்டங்கள் போலவும், ப்ரஹ்மா ருத்ரர் முதலிய கர்ம பத்த ஜீவகோடிகளை அதன் காய்கள் போலவும் வர்ணித்துப் பேசி, ஶரண்ய தம்பதிகளுடைய ஸங்கல்பங்களே இரண்டு ஆடுங்கருவிகள் என்று த்வநியால் விளக்கி, அவர்கள் இருவரும் கூடியே ஜகத்வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்துப் பரஸ்பரம் உகப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்றும்,

“𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍈 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿 𑌹𑌰𑌿𑌶”

என்பதனால், பிராட்டியின் த்ருப்திக்காகவே பகவான் ஜகத் வ்யாபாரமாகிற லீலையைச் செய்கிறானென்றும் அருளிச்செய்திருக்கிறார்.

“ உத்தரோத்தர நாநாரஸபாவ நிர்ப்பர ப்ரபாவயா க்ஷணாம்ஸவத்க்ஷிப்த பராதிகாலயா உதக்ரவிப்ரம லீலயா ஸ்ரியம் ப்ரஹர்ஷயந்தம் மஹாபுஜம் ” [அபூர்வமான நாநாவித ரஸத்தையும் பாவத்தையும் அடக்கிக்கொண்டதும், பாராதிகாலத்தைக்கூட ஒருக்ஷணத்தின் ஏகதேஸம்போலத் தோன்றும்படி நித்யநிரதிஸய மாயும் அந்தந்தத் தஸாநுகுணமாய் முக்தமாயும் விதக்தமாயுமுள்ளதுமான லீலையாலே பிராட்டியை மிகவும் உகப்பியாநின்றுள்ள மஹாபுருஷனாகிற உன்னை.]

உத்தரோத்தர நாநாரஸபாவ நிர்ப்பர ப்ரபாவயா - எம்பெருமானுடைய லீலையில் உள்ள ரஸபாவ பரம்பரையில் மேன்மேல்வரும் ரஸபாவங்கள் கீழ் அநுபவிக்கப்பட்டவற்றைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணங்களாக இருக்கின்றனவென்பதைக் குறிக்கின்றது, இந்த ‘ உத்தரோத்தர ’ என்னும் பதம். “ நவோ நவோऽயஶோக்ஷணா: ” என்கிறபடி பார்க்கப் பார்க்கப் புதியது போலத் தோன்றுவதன்றோ ரஸவிஸேஷ முடையதாகும்? ஒரு வஸ்துவை அநுபவிக்குங் காலத்தில், அந்த அநுபவத்தால் ஸர்வேந்த்ரிய ஸுகாஸ்வாதமும் ஏற்பட்டு இதர விஷயங்களில் மெய் மறதியும் ஸம்பவித்தால், அந்த அநுபவத்தில் ரஸம் இருக்கின்றது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ‘ யேந ராகத்ருதி ’ என்கிறபடியே அந்த அநுபவத்தைத் தவிர்த்து மற்றையெல்லாவற்றிலும் மெய்மறதியை உண்டாக்குமதுவே ரஸம். இப்படி ரஸங்கள் வீரரஸமென்றும், ஸ்ருங்காரரஸமென்றும் இத்யாதியாகப் பலவகைப்படும். பாவங்களும் இம்மாதிரியே பலவகைப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட ரஸபாவங்கள் பகவானுடைய லீலையில் பஹுமுகங்களாக நெருங்கி இருக்கின்றனவாம். ‘ நிர்ப்பர ’ என்பதற்கு - நெருங்கும்படி என்று அர்த்தம், ‘ ப்ரபாவ ’ என்பதற்கு - ‘ ஸம்பவ ’ அதாவது - கட்

டப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். இதனால், அபூர்வ நானா ரஸ பாவங்களால் நெருங்கும்படி கட்டப்பட்டிருக்கின்றது பகவானுடைய லீலை என்று ஆயிற்று; அதாவது - லோகலீலையிற்போல வல்லாமல், பற்பல ரஸங்களும் பற்பல பாவங்களும் பகவானுடைய லீலையில் காணப்படுகின்றன என்பதாம்.

க்ஷணாணுவத் க்ஷபிதவராதிகாலயா - சதுர்முகனுடைய ஆயுஸ்ஸுக்குப் பரகாலம் என்று பெயர். ஆதி ஶப்தத்தால், கணக்கற்ற சதுர்முகருடைய காலம் க்ரஹிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட பெரிய காலங்களெல்லாம், பகவானுடைய லீலாநுபவ காலத்தில் ஒருக்ஷணத்தின் ஸூக்ஷ்மதமமான ஏகதேஶம் போலக் கழிந்துவிடுகின்றனவாம். அதாவது - அப்படிப்பட்ட நித்ய நிரதிஶய ஸ்வபாவத்தை உடையது அந்த லீலையென்பது தாத்பர்யம்.

ஊமுக்த விதக்த லீலயா - எம்பெருமானுடைய லீலையில் மௌக்த்யம் வைதக்த்யம் இரண்டும் கலந்து நிற்கின்றன வென்பதால், அதன் அத்புத தமத்வம் வெளிப்படுகின்றது. காவ்யங்களில் நாயிகைகள் முக்தை மத்யை ப்ரகல்பை யென்று மூன்றுவகைப்படுவார்களென்றும், புதிதாக யௌவநம் அடைந்து காமம் ஈர்ஷ்யை முதலியவைகளால் கஷாயிதையா யிருப்பவள் முக்தையென்றும், யௌவநம் வந்து ஸ்வல்ப காலம் சென்ற பிறகு ஒருவிதமான தார்ஷ்ட்யத்தை அவலம்பித்து இருப்பவர்கள் மற்றை இருவரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. காமிகளுக்கு இம்மூவருடைய லீலையும் போக்யங்களே. ஆனால், ஒருவனுடைய காந்தை முக்தையாகவும் முக்தையல்லாமலும் இருக்க முடியாது. பகவானுடைய லீலையிலோ, மௌக்த்யம் வைதக்த்யம் ஸகலமும் ஒரே காலத்தில் பொருந்தியிருக்கின்றன வென்பதுதான் ஆஸ்சர்யம். பிராட்டியுடன் பரிமாறுவதைப் பற்றிப் பேசுவதாதலால், எம்பெருமானுடைய லீலைகள், இவ்விடத்தில் லோகரீதியை அநுஸரித்து வர்ணிக்கப்படுகின்றன.

உஹிஷீம் வ்ருஷஷ்யஞம் - "அகலகில்லே னிறையும்" என் கிறபடி ஒருபொழுதும் விஶ்லேஷத்தை ஸஹிக்காமல் இருக்கும் பிராட்டியை மிகவும் உகப்பியாநின்றுள்ள. 'வ்ருஷஷ்யஞம்' என்னும் வர்த்தமான நிர்தேஶத்தால், எப்பொழுதும் இதே வ்யா பாரமாக இருக்கிறான் பகவான் என்னும் திருவுள்ளம் வெளிப்படு கின்றது.

உஹாஹுஜம் - பருத்து நீண்டுள்ள திருக்கைகளை யுடைய (உன்னை).

"வாஹு ஷாயாவஷ்டப்ய யஸ்ய லோகோ உஹாத்மநঃ" என்று திருவவதார தஶையிற் சொல்லியிருக்கிறபடி, 'லோகங் கள் எல்லாவற்றையும் ஸம்ரக்ஷிக்கக் கூடியவளவு பருத்து நீண் டுள்ள திருக்கைகளை யுடையவனை' என்பது இவ்விடத்தில் விவ க்ஷிதம். அதாவது - லோகம் முழுவதும் அவனுடைய பாஹுச் சாயையை அவஷ்டம்பித்து நிற்கின்றதாகையால் நாமும் அதை அவஷ்டம்பித்து நிற்போமென்று தமக்குள்ள ஒரு விஶ்வாஸாதி ஶயத்தை இந்தப் பதத்தால் ஸூசிப்பிக்கின்றார். "கீழ்ச்சொன்ன லீலாரஸத்தாலே உகப்பிக்குமவன் என்பது மாத்ரமன்று; அணி மானத்தடவரைத் தோளாலே அணைத்து கப்பிக்கும் என்றும் தாத்பர்யம்; ஸ்வரூபகுணங்களிற் காட்டில் ரூபகுணமிறே இனிய தாயிருப்பது!" என்பது ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையின் அந் யாத்ருஶமான அபிப்ராயாவிஷ்கரணம்.

எஸ். வாஸுதேவன்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR :: MADRAS-90.

342

# ருக்விதாநம்.

ருக்விதாநம் எனும் க்ரந்தம் ஒரு ஸௌநகரால் இயற்றப் பட்டது. அவரை மஹர்ஷி யென்றும் சொல்வார்கள். மௌர்ய னை சந்த்ரகுப்தன் எனும் அதிராஜன் அரசாண்ட காலத்துக்கு முன், பாடலீபுரத்தில் நவநந்தர்கள் எனப்பட்ட மஹாபத்மனும் அவனுடைய எட்டு புத்ரர்களும் ஆண்டாரென்று புராணங்களால் தெரிகின்றது. இந்த மஹாபத்மனுடைய மந்த்ரி யொருவர் பௌள நகரென்று பெயர் கொண்டவர். ஸம்ஸ்க்ருத பாஷா பரிசய ச்ரே ஷ்டரான ஐரோப்யர்கள் அந்த பௌளநகர்க்குப் போதாயநரென்று வேறு பெயரும் உண்டென்றும், அவர்தான் ப்ரஹ்மஸூத்ரங்க ளுக்கு வ்ருத்திக்ரந்தம் இயற்றினரென்றும் சொல்வர்; ருக்விதாந கர்த்ருத்வத்தையும் அவருடையதென்று நினைத்து, அக்ரந்தம் 2,300 வருஷங்கட்கு முன் உண்டாயதென்றும் நினைப்பர்.

ருக்விதாநம் முதல் ச்லோகத்தில், கலிதோஷத்தால் வேதங் களுக்கும் மந்த்ரங்களுக்கும் சக்தி போய்விட்டதென்றும், அந் தத் தோஷநிவ்ருத்திக்காக த்விஜன் காயத்ரீயை ஆச்ரயிக்க வேண்டு மென்றும் சொல்லியிருக்கின்றது. இதனால் ருக்விதாநம் கலியுகத்தில் உண்டாயதென்று சொல்லக்கூடும். காயத்ரீ ஜபம் முதலானவற்றை விதித்தபடி முடித்தபின், ஸர்வ வேதமந்த்ரங்க ளுடையவும் ஸித்தியை அடையக்கூடுமென்று ருக்விதாநத்தில் சொல்லி யிருக்கின்றது. பின்னும் அக்ரந்தத்தில் ஸப்த வ்யாஹ்ருதி ஸம்புடமாக காயத்ரீயின் ஜபத்தையும், ஜபத்தின்முன் காய த்ரீ ந்யாஸத்தையும், அதன் ஸித்தியின் பொருட்டு அதைக்கொ ண்டு ஹோமத்தையும், தர்ப்பணத்தையும் சொல்லியிருக்கின்றது. பின்னல் ப்ராஹ்மண போஜநமும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் மந்த்ரந்யாஸம் செய்வதெனும் வழக்கமும், மந்த்ரஸித்

திக்காக, மந்த்ரஜபம், மந்த்ரத்தைக் கொண்டு ஹோமதர்ப்பணங்கள், ப்ராஹ்மணஜபோஜநம், எனப்பட்ட ஸம்ப்ரதாயமும் ருக்விதாந காலத்திற்கு முன்பட்டதென விளங்குகின்றது.

ருக்வேத ஸூக்தங்கள், வர்க்கங்கள், மந்த்ரங்கள், இவற்றுள் ஸித்தியை அடைவதற்காக அவற்றை விதிக்கப்பட்ட ஸங்க்யையின்படி, விஷ்ணுவின் ஆலயங்களிலும், சிவாலயங்களிலும், ஜபிக்கும்படி ருக்விதாநத்தில் சொல்லியிருக்கின்றது. ஐம்பது தரத்துக்கு மேற்பட்டு சிவாலயத்தையும், அதற்கும் மேற்பட்டு விஷ்ணு ஸந்நிதியையும் அவ்விடம் குறிப்பிட்டிருக்கின்றபடியால், ருக்விதாந காலத்திற்குப் பகுகாலம் முன்பட்டே இவ்வாலயங்களின் ஸம்ருத்தி ஆர்யாவர்த்தத்தில் உண்டென்று ஸ்பஷ்டமாகின்றது. மற்றொரு தேவதையினுடைய ஆலயத்தைப்பற்றி அந்த க்ரந்தத்தில் ப்ரஸ்தாபம் இல்லை.

ப்ரஹ்மஸூத்ரத்திலும், மஹாபாரதம் மோக்ஷதர்மத்திலும், பாஞ்சராத்ராகமங்களைப் பற்றியும், பாசுபதாகமங்களைப் பற்றியும் ப்ரஸ்தாபம் இருக்கின்றபடியாலும், 2,300-வருஷங்களுக்கு முன் நம் தேசத்தில் வஸித்த க்ரீக் தேசத்தாரால், அக்காலம், ருத்ரனையும் ஸ்ரீ க்ருஷ்ணனையும் நம் தேசத்தில் ஜநங்கள் உபாஸித்தனரென்று எழுதப்பட்டிருக்கின்றபடியாலும், ஆகமங்களும், ஆலயங்களும், விஷ்ணு சிவன் எனப்பட்ட தேவதைகளுடைய உபாஸ்தியும், புத்தன் காலத்துக்கு மிகவும் முற்பட்டன வென்பது விளங்கவில்லையா?

ருக்விதாநம் 20 - வது ச்லோகத்தில், இதிஹாஸ புராணங்களும், ஷடங்கங்களும் சொல்லப்படுகின்றபடியால், இதிஹாஸபுராணங்கள் ருக்விதாந காலத்திற்கு முன்பே, ப்ரஸித்தமாக, ஆர்யர்க்குள் இருந்தனவென்று விச்வஸிக்கப் பொருந்தும். இன்னும் 229 - வது ச்லோகமான, “ஹ்வயாமி ஜவெநஂத்ரஂ ஶதவாரஂ திஶெந்திஶெ ந । வ்ராஹ்மணாக்ஷேவ வசாரணாயெசு யயாயசு த்வஂவ ஈரஶ்யெத ”॥ எனும் ச்லோகத்தின்படி, ருக்வேதம் 4 - வது அஷ்டகம், 7 - வது அத்யாயம், 13 - வது வர்க்கம், 5 - வது மந்

த்ரஜபத்தால், வ்யாஸர் சொன்ன புராணார்த்தம் யதார்த்தமாகத் தெரியுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ருக்விதாந காலத்தில் வ்யாஸ க்ருதங்களான புராணங்களில்லையென்பார் இதைக் கவனிப்பாராக. அடுத்த 230 - வது ச்லோகம் மேலே குறித்த மந்த்ரத்துக்கு அடுத்து நிற்கும் மந்த்ரஜபத்தால் மஹாகாவ்யங்களில் விச்வாஸமும், அவிச்வாஸ நிவ்ருத்தியும் பலிக்கு மென்று சொல்கின்றது. மஹாகாவ்ய சப்தம் வால்மீகி க்ருதமான ஆதி காவ்யமெனும் ஸ்ரீமத் ராமாயணத்தை முக்யமாகக் குறிக்குமென் மென்பதை ஸர்வ ஆஸ்திகனும் அங்கீகரிப்பான்.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில், ஆறுவது அத்யாயம், மைத்ரேயி ப்ராஹ்மணமெனும் ஐந்தாவது ப்ராஹ்மணத்தில் இதிஹாஸ புராணங்களைப்பற்றிச்சொல்லப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யோபநிஷத், ஏழாவது ப்ரபாடகத்திலும், 'ഇതിഹാസപുരാണം പഞ്ചമം വേദാനാം വേദം' என்று வசநமிருப்பதால், 'വേദാന് അധ്യാപയാമാസ മഹാഭാരതപഞ്ചമാന്' எனும் வசநப்படி, ருக்வேதாதிகளைப் போல், பஞ்சமவேதமென ப்ரஸித்திபெற்ற மஹாபாரதமும் இதர இதிஹாஸங்களும், புராணங்களும், உபநிஷத் காலங்களிலே இருந்ததாய்த் தெரிகின்றது. பௌத்த சரித்ர விமர்சியான ரிஸ்டேவிஸ் எனும் ஐரோப்யர் மேற்குறித்த உபநிஷத்துக்கள் 2,600 வருஷங்கட்கு முற்பட்டன வென்று ஒப்புக்கொள்கின்றார்.

'വ്യാസസ്യ ഹാദാച്ച വക്ത്രാദി നാരായണകഥാശ്രിതം' என்று ஆரம்பிக்கப்பட்ட மஹாபாரதம் அவ்வண்ணம் முதலில் இல்லையென்றும், ஸ்ரீராமசரிதம் முதலில் ஸ்ரீராமனை அவதாரபுருஷனாக நினைத்து எழுதப்படவில்லையென்றும், உபநிஷத்திலேயே வேதங்களைப்போல் புருஷார்த்த ப்ரதமென விச்வஸிக்கப்பட்டுப் பஞ்சம வேதமென எண்ணப்பட்டவையும், வால்மீகி க்ருதமும் வ்யாஸோக்தங்களுமான இதிஹாஸபுராணங்களைத் தேசிங்குராஜன் கதையாக நினைத்து, யுக்த்யாபாஸங்களால் கக்ஷி சொல்கின்ற ஸம்ப்ரதாயாத்மாக்கள் ருக்விதாநம் முதலான க்ரந்தங்களைச் செம்மையாய்ப் பார்க்கமாட்டாரோ?

ருக்விதாநத்தில் பல ச்லோகங்களில், கடோபநிஷத்தில் வெளியிட்டிருக்கின்றபடி, 'தத்விஷ்ணோ: பரமம்பதம்' 'தான் ஸர்வ முமுக்ஷுக்களால் ப்ராப்யம்' என்று காட்டப்பட்டிருக்கின்றது. 30 - வது ச்லோகத்தில் 'அதோதேவா அவந்துந:' எனும் வர்க்கத்தை ஜபம் செய்கிறவன், 'ப்ரஹ்மாத்யை: ஸம்ஸ்துத: ஸ்ரீவிஷ்ணோ: ஸாயுஜ்யமாப்நுயாத்' என்று, ப்ரஹ்மாதி தேவர்களால் வணங்கப்பட்டவனாய் நாராயண ஸாயுஜ்யத்தை அடைகின்றானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. 38 - வது ச்லோகத்தில், 'விஷ்ணோர்நுகம்' எனும் ஸூக்த ஜபத்தினால், முதலில் விஷ்ணுபக்தியும், அதன்பிறகு ஜ்ஞாநோதயமும், முடிவில் விஷ்ணு ஸாயுஜ்யமும் பலமெனக் கண்டிருக்கின்றது. 'ஸர்வஜ்ஞாநம் ததோ பக்த்யா ஸாயுஜ்யஞ்ச ஜநார்த்தநம்' எனும் ச்லோகார்த்தம் இதனால் த்ருடப்படுகின்றது. 155 - வது ச்லோகத்தில், 'அயம்தேவ' என்றாரம்பிக்கும் அத்யாயத்தை த்ரயோதசியில் ஜபிக்கின்றவன் யமராஜ தர்சநமின்றி விஷ்ணுலோகம் செல்வன் என்றிருக்கின்றது.

236 - வது ச்லோகம் முதல் 240 - வது ச்லோகம்வரையில், 'தமிஷ்ட்வா' மந்த்ரஜபத்தால், மரணகாலத்தில் மஹாவிஷ்ணு ஸ்மரணம் உண்டாமென்றும், 'அதோதேவா' மந்த்ரஜபத்தால் ஸ்ரீ வைகுண்டத்தில் விஷ்வக்ஸேநாதிகளுடன் வாஸத்தை அடைகின்றானென்றும், 'இதம்விஷ்ணு:' மந்த்ரஜபத்தால் ஸ்ரீவைகுண்டத்தில் ஜயாதிகளுடன் கூடினவனாய்க்கொண்டு பகவானுடைய ஸாரூப்யத்தை அடைகின்றானென்றும், 'த்ரீணிபதா' மந்த்ரஜபத்தால் வைநதேயாதிகளுடன் கூடிக்கொண்டு பகவானுடைய ஸாந்நித்யத்தை யடைகின்றானென்றும், 'விஷ்ணோ:கர்மாணி' மந்த்ரஜபத்தால் விஷ்வக்ஸேநாதிகளுடன் விஷ்ணுஸாயுஜ்யமடைகின்றானென்றும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 252 - வது ச்லோகத்தில், 'தத்விப்ராஸ:' மந்த்ரஜபத்தால் மரண

காலத்தில் விஷ்ணு தேஜஸ்ஸை அடைகின்றனென்று சொல்லி யிருக்கின்றது. 349 - வது ஶ்லோகத்தில் 'ஏஷாவ்யாஸ' மந்த்ர ஜபத்தால் மஹாவிஷ்ணுவினிடம் ஸதா ஏகபுத்தி யுண்டாமென் றிருக்கின்றது. 432 - வது ஶ்லோகம், 'வேதாக்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி: । தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்ஶய: ॥' "எவ்வளவு பர்யந்தம் வேதாக்ஷரங்களை த்விஜர்கள் படிக்கின்றனரோ, நிஸ்ஸம்ஶயமாக அவ்வளவு பர்யந்தம், அவர் கள் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்தவராகின்றார்" என்று வெளி யிடுகின்றது. இங்கே,

"ஆதியந்த மரியென யாவையும்
ஓதினாரல கில்லன வுள்ளன
வேதமென்பன மெய்ந்நெறி தன்மையன்
பாதமல்லது பற்றலர் பற்றிலார்."

எனும் கம்பன் செய்யுளைச் சிந்திக்கலாம்.

இன்னும் 357 - வது ஶ்லோகத்தில் ஒவ்வொரு தினமும் ஸுபர்ண மந்த்ரத்தை ஏகவாரம் ஜபிப்பதால் பரமாத்மாவில் புத்தி லயிக்குமென்று சொல்லப்பட்டதால், விஷ்ணுவுக்கும் பரமாத்மா வுக்கும் அபேதம் ஸித்திக்கின்றது. 359 - ஶ்லோகம் 'ப்ரஹ்ம ஜஜ்ஞாநம்' எனும், மந்த்ரஜபத்தால், ப்ரஹ்மஜ்ஞாந முண்டாகு மென்றும், 366 - வது ஶ்லோகம் 'த்ர்யம்பகம்' எனும் மந்த்ர ஜபத்தால், ம்ருத்யு பயம் நீங்கிப் பரமாத்மாவில் ஸம்ஸ்தாநம் உண் டாகுமென்றும் சொல்லுகின்றன.

இப்படி ஸர்வேஶ்வரன் விஷ்ணுவென்றும் அவன் ஸ்ரீவைகுண் டத்தில் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாலும், முக்தராலும், ஸதா அநுபவிக்கப்படுகின்றனென்றும் சொல்லி, அவனை அடைவ தற்கு உபாயமாகின்ற மந்த்ரஜபங்களை விவரித்தும், ருக்விதாநம் ப்ரகாசிக்கின்றது. ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தம் ப்ரஶஸ்தமாக இப் போதுபோல் ஆர்யநாட்டில் 2,300 வருஷங்களுக்கு முன்னமே பரவியுள்ளது. இது 2,000 வருஷங்களுக்கு முன்பட்ட பாஸ

கவியின் நாடகங்களாலும் ஸுப்ரஸித்தம்; 2,300 வருஷங்கட்கு முன்பட்ட ப்ரஹ்மஸூத்ரத்தாலும் ஸ்பஷ்டம். இந்தப் பாகவத ஸம்ப்ரதாயம் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் வெளியிட்டபடி, த்வாரகா நாதனைப் பரமாசார்யனாகவும், பரம்ப்ராப்யனாகவும் அடைந்து, மஹாபாரத யுத்தகாலம் முதற்கொண்டு வ்ருத்தியடைந்தது. அதற்கு முன்னும் ஸ்ரீமந்நாராயணனை, ஆலய ப்ரதிஷ்டை ஸஹிதமாய் ஸ்ரீமத்ராமாயணத்தில் கண்டபடி, அயோத்தி மன்னர்கள் உபாஸித்தனர்.

ருக்விதாநத்தைப் பக்ஷபாதமும், வக்ரபுத்தியு மின்றிப் படிப்பவர்க்கு, ஸ்ரீமத்ராமாயணம், மஹாபாரதம், வ்யாஸோக்த புராணங்கள், சைவ வைஷ்ணவ ஆலயங்கள், இவை, கிட்டத்தட்டத் தத்காலமிருக்கின்றபடியே ஐரோப்யரால் ஸௌநகர் காலமெனப் பட்ட 2,300 வருஷங்கட்கு முன்னமே இருந்தனவென்பது புலப்படும். ஸௌநகர் அக்காலத்துக்கும் முன்பட்டவரென்று நாம் நம்புகின்றோம். மேற்சொன்ன யாவும், நம் பெரியோர் விச்'வஸித்த ப்ரகாரமே பஹுகாலமாக இருக்கவேண்டு மென்பதில் ஸந்தேஹமில்லை.

ருக்விதாநத்தில் ஸர்வ அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் வேதமந்த்ரங்களின் ஜபத்தால் ஸித்திசொல்லியிருக்கின்றது. அதைப்பற்றி விசாரம் இவ்விடத்தில் நாம் செய்கின்றோமில்லை. 409,410,411 - வது ச்'லோகங்களால் வேதாக்ஷரங்களைப் பணத்துக்கும் போஜநத்துக்கும் ஆசைப்பட்டு விநியோகம் செய்கின்றவரை ப்'ரூணஹத்தி செய்பவராகவும், சண்டாளராகவும், சொல்லியிருக்கின்றது. அவர்கள் க்ரஹங்களில் போஜநம் செய்கின்றவனுக்கும் ப்ராயச்'சித்தம் விதித்திருக்கின்றது. 186 - வது ச்'லோகத்தில் வேதநிந்தை செய்பவனுக்கு ப்ராயச்'சித்தம் விதித்திருக்கின்றது. இக்காலத்தில் பாபமென சங்கிக்காத பல அக்ருத்யங்கள் ருக்விதாநகாலத்தில் பாபமாக எண்ணப்பட்டனவென்று தெரிகின்றது.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்ய ஸபையின்

# வார்ஷிக மஹாஸங்கம்.

[illegible] ।

[illegible] ॥

ஸ்ரீவைஷ்ணவர்களான பாகவதோத்தமர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம். ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை ஸம்பந்தமாக ஸ்ரீ வைஷ்ணவர்களின் வார்ஷிக மஹாஸங்கமொன்று நாலைந்து வர்ஷங்களாக பற்பலவிடங்களில் நடைபெற்றுவருகின்றது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 1910-வது வர்ஷம் மார்கழி மாஸத்தில் தஞ்சாவூரிலும், 1911-ல் நீடாமங்கலத்திலும், 1912-ல் மதுராந்தகத்திலும் இந்த ஸங்கம் சேர்ந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் திருவுள்ளத்திற்கு உகப்பாகவே நடைபெற்றுவந்தது. 1913-வது வர்ஷத்திய மஹா ஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்த வேண்டும் என்னும் ஆஸ்தை சிலருக்கு இருப்பதாகத் தெரியவந்ததன்பேரில், இந்த ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் அதைப்பற்றி ஆலோசித்து, மார்கழி மாஸத்தின் சைத்யம் ஸ்ரீ அஹோபிலத்தில் அஸஹ்யமாக இருக்குமென்று எண்ணி, அந்த மார்கழிக்கு அடுத்த பங்குனி மாஸத்தில் அவ்வர்ஷத்திய ஸங்கத்தை ஸ்ரீ அஹோபிலத்திலேயே நடத்தினார்கள். ஆரம்பத்தின் குருத்வத்தையும் தமக்கு இருந்த ஸாமக்ரிகளின் ந்யூநதையையும் ஆலோசித்துப் பார்த்து, 'இந்த ஸங்கம் எவ்விதம் நடைபெறும்?' என்று ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் மனம் தளர்ந்து நிற்க, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன், தனது கடாக்ஷத்தால் அந்த ஸங்கத்தை எவ்வித குறைவுமில்லாதபடி பரிபூர்ணமான நிஷ்பத்தியுடன் நிறைவேற்றிக்கொண்டான். ஸாது கைங்கர்யங்களெல்லாவற்றிலும், 'நம்மை நிமித்த மாத்ரமாக வைத்துக்கொண்டு பகவானே ப்ரவ்ருத்தித்து கைங்கர்யங்களைப் பூர்த்திசெய்துகொள்ளுகிறான்' என்னும் உறுதியுடன் நாம் ப்ரவ்ருத்தித்தால், அவைகளின் நிஷ்பத்தியைப் பற்றி நாம் ப்ரமிப்பதற்காவது ஶோகிப்பதற்காவது எவ்வித காரணமும் இராதன்றோ? இந்த ஸ்ரீ அஹோபிலத்துச் சங்கம் 1914-வது வர்ஷத்தில் நடைபெற்றபடியால், அதே வர்ஷத்தில் மற்றொரு ஸங்கம் அநாவஶ்யமாயிற்று. நாளது 1915-வது வர்ஷத்திய ஸங்கத்தை வருகிற மார்கழி மாஸத்தில்

திருவெவ்வுளூர் திவ்யதேசத்தில், ஸ்ரீ வீரராகவன் கடாக்ஷத்தை முன்னிட்டு நடத்தலாமென்று இதன் ப்ரவர்த்தகர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ப்ராயேண இதன் க்ரமம் முழுவதும் யதாபூர்வம் வித்வத் ஸதஸ்ஸும் உபந்யாஸங்களும் அடங்கியதாகவே இருக்கும். அதன் விஸ்தாரத்தை, ஸகலமும் நிஷ்க்ருஷ்டமானவுடன், உத்தேசம் இன்னும் 10 அல்லது 15 தினங்களுக்குள்ளாக ப்ரசுரம் செய்வோம். இந்த ப்ரயத்நத்தின் ஸாதுத்வத்தை உணர்ந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவாக்ரேஸரர்களெல்லாரும் அந்த ஸங்ககாலத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, தங்கள் தங்களால் இயன்ற வரையில் அதற்கு உதவியைச்செய்து, அதை நிர்விக்நமாக நடத்திவைக்க வேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

இந்த சிஷ்ய ஸபையின் முக்கிய உத்தேசம் என்னவென்றால்-ஆத்யந்திகமான நிஶ்ரேயஸத்தை ஸாதித்துக்கொடுக்கக்கூடியதான நமது ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்தியைத் தேட முயல்வதே. நம்மவரில் அநேகர், பாக்த்யபாவத்தினாலோ அப்ரத்யக்ஷ வித்யையிலுள்ள ஔதாஸீந்யத்தினாலோ, தத்வாந்வேஷணத்தில் மனத்தைச் செலுத்தாமலே, ஐஹிகஶ்ரேயஸ் ஸாதகங்களான ஸாமக்ரிகளைத் தேடுவதில் வ்யாப்ருதர்களாகக் காலத்தைக் கழிக்கிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம். இவர்களுக்கு விபரீத ருசி இல்லாமையாலே, நமது சாஸ்த்ரங்களின் ஸாரதமங்களான அம்சங்களை ஸுலபங்களாகவும் இவர்களுடைய ஜ்ஞாநகோசரங்களாகவும் செய்தால், அவைகளின் ஸ்வாது ஸ்வபாவத்தை உணர்ந்து ஒருகால் இவர்கள் தத்வாந்வேஷண மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கலாமென்றும், இப்படி ஒருகால் இவர்கள்திரும்பிவந்தால் இவர்களுடைய பலத்தைக்கொண்டு விபரீத ருசியுள்ளவர்களையும் மீட்சி பெறும்படிச் செய்ய ஸம்பாவனை ஜநிக்கலாமென்றும் எண்ணி, இந்த ஸபா ப்ரவர்த்தகர்கள், சென்ற ஐந்து வர்ஷகாலமாக ப்ரதிவர்ஷமும் வித்வத் ஸதஸ் சேர்ப்பதும், உபந்யாஸாதிகளை நடத்திவைப்பதும், ப்ரதிமாஸமும் இதிஹாஸ புராணாதிகளிலுள்ள தர்மங்களையும் மற்ற சாஸ்த்ர விசாரங்களையும் பத்ரிகா ரூபமாக ப்ரசுரம் செய்து அந்தப் பத்ரிகையை ஸ்வல்ப க்ரயத்திற்கு ஸாமாந்ய ஜநங்களுக்குக் கூட எட்டும்படி ப்ரசாரம் செய்வதும், இத்யாதியான உபாயங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கிறார்கள். இந்த ப்ரவ்ருத்தி முழுவதும் வீணாகிவிட்டது என்று சொல்லமுடியாது. மநோரதம்

யாவத்தும் நிறைவேறிவிட்டாலும், இந்த ப்ரவ்ருத்தி சிலருக்காவது உபகாரகமாக இருக்கிறது என்றும் பகவந்முகோல்லாஸகரமாக இருக்கிறதென்றும் த்ருடமாகச் சொல்லலாம். ஆனாலும், 'ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி' என்கிறபடி ஸ்வல்ப காலமாக இதற்குச்சில விக்நங்கள் ஸம்பவித்திருக்கின்றன. பலவிடங்களில் இதன் ப்ரவர்த்தகர்களின் அபிஸந்தியினுடைய அந்யதாக்ரஹணம் ஏற்பட்டிருக்கின்றது; இந்த ப்ரவ்ருத்திக்கு ஆதாரபூதர்களாக இருந்தவர்களிற் சிலர் ஶரீர தர்மத்திற்கு உட்பட்டு இவ்வுலகிலிருந்து விலகிவிட்டார்கள்; புதிதான ஓர் ஆரம்பத்தில் ஸ்வபாவமாக ஸம்பவிக்கும் உத்ஸாஹமும் காலக்ரமேண ஶைதில்யத்தை அடைகின்றது; இந்த ஸதஸ்ஸுக்கு வேண்டுவதான அர்த்த ஸம்பத்தும் அநேக காரணங்களினால் போராததாக இருக்கின்றது. அநேக ஆஸ்திகாக்ரேஸரர்கள் தீப்யமாநர்களாக எழுந்தருளியிருக்கும் காலத்தில் பகவத் கைங்கர்ய ரூபமான இந்த ப்ரவ்ருத்திக்கு ஒருவிதகுறைவும் ஸம்பவிப்பது ந்யாய்ய மன்றாகையால், அந்த ஆஸ்திகர்க்ரேஸரர்களிடம் இந்த ஸ்திதியை விஜ்ஞாபநம் செய்து கொண்டால் இதற்கு ஒரு ப்ரதீகாரம் ஸம்பவிக்குமென்று எண்ணி இவ்வர்ஷத்திய மஹாஸங்கம் ஒரு விஶேஷாபிஸந்தியுடன் சேர்க்கப்படுகின்றது. ஆகையால் ஸமஸ்த ஆஸ்திகர்களும் அக்காலத்தில் எழுந்தருளி, ஜகத்திற்கெல்லாம் ஶ்ரேயஸ் ஸாதகமான இந்த ப்ரயத்நத்தை அநுக்ரஹித்து, மேன்மேல் அபிவ்ருத்த மாகும்படி கடாக்ஷிப்பார்களென்றுத்ருடமாக நம்புகிறோம். ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அப்படியே கடாக்ஷித்து ப்ரயத்நத்தைப் பூர்த்தி செய்து வைப்பன் என்பதற்கு ப்ரவர்த்தகர்களின் அந்தஃகரண ப்ரவ்ருத்தியே ப்ரமாணம்.

இந்த வர்ஷம் இந்த ஸபையைப் பொதுவைஷ்ணவ ஸபையாகச்செய்து, அதற்கு வேண்டியபடி ஸபையின் விதிகளை மாற்ற வேண்டுமென்றும், அப்படிச் செய்வதால், எல்லா ஶ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயிகளின் சேர்க்கையும் ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு உபகாரகமாக ஆகுமென்றும் ஸபையின் ப்ரவர்த்தகர்களில் பலருக்கு எண்ண மிருக்கிறது. ஆகையால் ஶ்ரீ மடத்துச் சிஷ்யர்களும் சிஷ்யர்களல்லாத மற்ற ஆஸ்திகர்களும் மேல் விவரித்தபடி திருவள்ளூரில் நாளது டிசம்பர்மீ கடைசியில் சேரப்போகிற ஸதஸ்ஸுக்கு பஹுவாய் எழுந்தருளி ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு ஹேதுவான கார்யங்களை ஸ்திரமாக ஏற்பாடு செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஸதஸ்ஸின் உபந்யாஸ விவரங்கள் பிந்தி விஜ்ஞாபநம் செய்யப்படும்.

மேற்படி ஸபையின் நிர்வாஹ அங்கத்தினர்.